# ஸ்ரீ குமரகுருபரர்



தொகுதி - 9 பகுதி - 9

ஆனி - 1 15—6—87

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார் திறப்படூஉம்
தீவினை அஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

தாம் கற்றதைத் தமக்குப் பயன்படும்படி அதற்குத்தக நில்லாதவராய்ப் பிறர்க்கு மட்டும் பயன்படும்படி "நூலிற் கூறியபடி நில்லுங்கள்" என்று சொல்லி அறிவுறுத்தும் வகையால் கற்றவற்றை விற்பனை செய்பவர்கள் தமக்கே உரியதாக வேறான பயனை உடையவர் ஆவார் அப்பயன் யாதெனின், திறமை வாய்ந்த கொடுவினைக்கு அஞ்சாத வீரங்கொண்டு தென்திசைக்கு அதிபதியான எமனை வேலை செய்யும்படி ஏவிக் கொள்ளல் ஆகும்.

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்**
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 விடையரங்கம்
3 நூல்நிறை
4 காளமேகமும் கவிதைத்தாகமும்
5 பெரியபுராணத்துள் அப்பருக்கு இடப்பட்ட பெயர்கள்
6 பரிபாடற் செவ்வேள்
7 திருச்சதகமும் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும்
8 ஆலயபூஜைப் படிக்காசு நிதி
9 ஞானமிர்தம்

உ

சிவ சிவ

திருப்பனந்தாளில்

# ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் 299-ஆம் ஆண்டு

# மாகேசுவர பூஜைத் திருநாள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவுளப்பாங்கின் வண்ணம்

பிரபவ ஆண்டு வைகாசித்திங்கள் 31ஆம் நாள்
[14—6—87] ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இதனையொட்டி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய பிரபந்தங்கள் பற்றிய கருத்தரங்குகள், நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் நடைபெறும்.

அன்பர்கள் வந்து திருவருள் பெறுவாராக.

"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்"

ஆணைப்படி,

சிவ. குஞ்சிதபாதம்
மானேசர்.

முத்து. மெய்கண்டதேவன்
மானேசர்.

# ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
## 299 ஆம் ஆண்டு
# மாகேசுவர பூஜைத்திருநாள்

---

**பிரபவ ஆண்டு வைகாசித் திங்கள்**
**31ஆம் நாள் 14-6-87 ஞாயிற்றுக் கிழமை**

— 卐 —

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமைநீங்கிக் **'கந்தர்கலிவெண்பா'**ப் பாடி அருள் பெற்றார்; மதுரை மீனாட்சி அம்மை மீது **'பிள்ளைத் தமிழ்'** பாடி அம்மையால் முத்தாரம் அணியப் பெற்றார்; திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கிணங்க **'நீதிநெறி விளக்கம்'** என்னும் நூலை அருளினார்; தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டு அவரை ஞான குருவாகக்கொண்டு **'பண்டார மும்மணிக்கோவை'** பகர்ந்தார்; ஆரூர், வேளூர், தில்லை தரிசித்துத் **'திருவாரூர் நான்மணிமாலை' 'முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' 'சிதம்பர மும்மணிக்கோவை'** முதலியன பாடினார்; காசி சென்று **'சகலகலாவல்லி மாலை' 'காசிக்கலம்பகம்'** முதலியன அருளினார்; சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அம்மன்னன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத் துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பலவாணத்தம்பிரான் முதலியோருக்கு வித்யா குருவாகத் திகழ்ந்தார். செயற்கரிய செயல்கள் பல புரிந்த ஸ்ரீ குமரகுருபர முனிவர் பெருமானின் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

உ

# ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் நினைவுக் கருத்தரங்கம்

இடம் : திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

நாள் : 14—6—87 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை மணி 7-30 முதல்

வரவேற்புரை:

**பேரா. கே. எம். வேங்கடராமையா**

எம் ஏ.,பி.ஓ.எல்.

கருத்தரங்கத் தொடக்கவுரை:

**பேரா. அ. ச. ஞானசம்பந்தன்** அவர்கள்,எம்.ஏ.,

சென்னை

கருத்தரங்கத் தலைவர்:

**திரு மு.அருணாசலம்** அவர்கள், எம். ஏ.

திருச்சிற்றம்பலம்.

பொதுத்தலைப்பு:

**ஸ்ரீ குமரகுருபரர் திருவாக்கும் ஒப்புமைகளும்**

| சொற்பொழிவாளர்கள் | தனித்தலைப்புக்கள் |
| --- | --- |
| 1. முதுமுனைவர் ச. தண்டபாணி தேசிகர் மயிலாடுதுறை | தேவர்குறளும் திருநான்மறைமுடிவும் |
| 2. டாக்டர் கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ., பி.எச்.டி., திருப்பனந்தாள் | மூவர்தமிழும் முனிமொழியுங் கோவைதிருவாசகமும் |
| 3. திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ.. தருமபுரம். | திருமூலர் சொல் |

அகத்தியர் தேவாரத்திரட்டு நூல் வெளியீடு

செந்தமிழ்ச் செல்வர், கல்விக் காவலர் வித்துவான்

**டாக்டர் ம.வெ. ஜெயராமன்** அவர்கள்,எம்.ஏ., டி.லிட்.,

பெங்களூர்

நன்றியுரை: திரு தா. ம. வெள்ளைவாரணம்

## 1987ஆம் ஆண்டு

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம் பாலிப்பு

கீழ்க்கண்ட இடங்களுக்குத் தொகை அனுப்பப்பட்டுள்ளது

| | ரூ | | ரூ |
|---|---|---|---|
| வாரணசி அன்னம்பாலிப்பு & பண்டாரா | 2000 | பழைய பாபநாசம் | 250 |
| பிரயாகை | 400 | கொடுமுடி | 300 |
| ஹரித்வார் | 700 | திருப்பாதிரிப்புலியூர் | 300 |
| ரிஷிகேசம் | 400 | புதுடெல்லி | 250 |
| கேதாரம் | 400 | வடதிருவாலங்காடு | 250 |
| திருப்புகலூர் | 450 | சீர்காழி | 250 |
| திருவாரூர் | 350 | ஆச்சாள்புரம் | 450 |
| நாகப்பட்டினம் | 450 | திருமாகறல் | 300 |
| தருமபுரம் | 500 | வைத்தீசுவரன்கோயில் | 350 |
| திருவிடைமருதூர் | 225 | ஆக்கூர் | 250 |
| திருவிசநல்லூர் | 275 | வேதாரண்யம் | 250 |
| காஞ்சிபுரம் | 300 | இராமேசுவரம் | 500 |
| திருக்கழுக்குன்றம் | 300 | சிதம்பரம் | 300 |
| திருக்கச்சூர் | 200 | தில்லைவாழந்தணர் அன்னம்பாலிப்பு | 500 |
| திருவொற்றியூர் | 250 | ஆச்சிராமம் | 350 |
| திருத்தணி | 300 | கன்னியாகுமரி | 250 |
| ஸ்ரீ காளஹஸ்தி | 300 | மதுரை | 500 |
| கும்பகோணம் | 400 | திருப்பரங்குன்றம் | 250 |
| திருநள்ளாறு | 450 | திருவண்ணாமலை | 500 |
| காரைக்கால் | 200 | திருக்கோவலூர் | 250 |
| சுவாமிமலை | 300 | திருவானைக்கா | 250 |
| திருவெண்காடு | 300 | விராலிமலை | 250 |
| உத்தரகோசமங்கை | 250 | திருக்கடவூர் | 250 |
| சென்னை | 250 | மயிலாடுதுறை | 400 |
| விருத்தாசலம் | 400 | திருவையாறு | 350 |
| திருநெல்வேலி | 250 | கஞ்சனூர் | 250 |
| திருக்குற்றாலம் | 400 | திருவீழிமிழலை | 200 |
| பவானி | 400 | சிவகாசி | 200 |
| அவிநாசி | 300 | ஸ்ரீவைகுண்டம் | 500 |
| திருவாடானை | 250 | காவிரிப்பூம்பட்டினம் | 225 |
| திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்) | 250 | திருஈங்கோய்மலை | 300 |
| பேரூர் | 300 | திருச்செந்தூர் | 225 |
| திருப்பத்தூர் | 250 | பழனி | 400 |
| | | திருப்பனந்தாள் | 10,000 |

15—6—87 வாரணசி குமாரசுவாமி மடத்தில் சாதுக்கள் பண்டரா

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தில்லைப்பெருமானைக் கும்பிடும் பெரும்பேறு குறித்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பல திருப்பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

பொன்மன் றிறைஞ்சிடுக.
(சி. செ. கோ. 1)

கூற்றம் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றம் துடைத்தேம் துடைத்தேமால்.
(சி. செ. கோ. 8)

வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி.
(சி. செ. கோ. 10)

கங்கையாள் கேள்வன் கழல்தொழூஉங் கைகூப்பி
நின்றிறைஞ்சச் சென்றிறைஞ்சும் கூற்று.
(சி. செ. கோ. 15)

அண்டர்கள் கண்களிப்பத் தொண்டர் அகம்குளிர்ப்ப
நின்றாடும் ஆடற்கு உருகா திருத்திரால்.
(சி. செ. கோ. 23)

கொண்டலோ நும்குழற் கோதையோ நும்களைக்
கண்டன நும்திறம் காண்மினே காண்மினே.

(சி. செ. கோ. 37)

எளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து.

(சி. செ. கோ. 38)

பூங்கழல் இறைஞ்சுதும்
விண்மிசைப் போகிய வீடுபெறற் பொருட்டே.

(சி. செ. கோ. 43)

விமலன் குஞ்சித கமலம் கும்பிட
வேண்டுவர் வேண்டார் விண்மிசை உலகே.

(சி. செ. கோ. 50)

புதுவிருந் துண்ண உண்ண
அதிசயம் விளைக்குநின் அற்புதக் கூத்தே.

(சி. செ. கோ. 57)

மன்றுடையான் வார்கழல்கண்டு
உய்மின் உறுதி பிறதில்லை.

(சி. செ. கோ. 83)

தாழ்த்துமின் சென்னி தலைவற்கு.

(சி. செ. கோ .84)

முதலிய திருப்பாடல் தொடர்கள் பொதுநடம் கும்பிடும் பேறுபற்றிப் பேசுவன.

சிதம்பரச் செய்யுட் கோவை 20 ஆம் திருப்பாடலில் பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று யாமே களிதூங்கி இருந்தேம் என்று சுயாநுபவம் வெளிப்படப் பாடியதைப் போலவே, 22ஆம் திருப்பாடலிலும்,

ஆனாலும் என்போல்மற்று ஆர்பெற்றார் அம்பலத்துள்
மாநாடகம்காணும் வாழ்வு.

என்று சுயாநுபவம் வெளிப்படப் பாடியுள்ளமை சுவைக்கத்தக்கதாகும்.

இத்திருப்பாடலில் எல்லாமாகப் பெருமான் இலங்கும் திறம் சுட்டும்வகையில் பதின்மூன்றுவிளிகளை ஸ்ரீ சுவாமிகள் அமைத்துள்ளார்கள்.

வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனே அவ் வூனில் உயிரே உயிர்த்துணையே
ஆனேறும் ஏறே அரசே அருட்கடலே
தேனே அமுதே அளியோங்கள் செல்வமே!

என்பன அவை. மறிபுனல் என்பது அலையுள்ள நீர்நிலையைக்குறிக்கும். குளம், ஏரி, கடல் நீர்கள் மறிபுனல்கள். அருட்கடல் என்பது குணம் கூறிய விளி.

அளியோங்கள் செல்வமே என ஸ்ரீமந் நடராஜப் பெருமானை விளித்துள்ளமையைச் சற்று நிதானித்துச் சிந்திக்க வேண்டும். இரக்கப்படத் தகுந்தவர்கட்கெல்லாம் செல்வனுகை உள்ளவன் என்றபடி. அறிவாராய்ச்சி உடையார்க்குத் தொலைவிலும், அன்பொன்றே உடையர்க்கு அருகிலும் இறைவன் இருக்கிறான். எனவே அளியோங்கள் செல்வமாக உள்ளான்.

அளியோங்கள் என்பது தன்மைப்பன்மை தம்மை உள்ளிட்ட அடியார்களைக் குறிக்கிறது. இதனுல் சிதம்பரத்தில் ஸ்ரீ சுவாமிகள் தங்கியிருந்தபோது ஸ்ரீ சுவாமிகள் தம் உள்ளடக்கிக் கூறத்தக்க சிலரும் உடன் உறைந்தனர் என ஊகித்துணரத்தகும்.

அடுத்த அடிகளில் ஸ்ரீ சுவாமிகள் தம்தகுதிக் குறைவுகள் என இரண்டினைச் சுட்டுகிறுர். அவை இரண்டும் இறைநெறிசாரார்நிலை ஆகும். ஞானிகள் மன்பதைகளின் இத்தகு குறைகளைத் தமதாகக் கூறுவது மரபாகும்: அவை,

1. யான் புலனும் இலன்
2. யான் நலனும் இலன்

என்பவனவாம். புலன் எனும் சொல் சுவை ஒளி ஊறு ஓசை, நாற்றம் எனும் பொறியுணர்வுகளைந்தனையும், நலன் எனும் சொல் அழகினையும் குறிப்பது. எனினும் ஸ்ரீ சுவாமிகள் புலன் என்பதை அறிவு என்னும் பொருளி லும், நலன் என்பதை நற்குண நற் செய்கைகள் என்ற பொருளிலும் ஈண்டுக் கையாண்டுள்ளார்கள்.

யான் புலனும் இலன் என்பதும் உண்மையன்று; சகலருடைய குறையை ஏறிட்டுக் கொண்டு கூறியதே யாகும். ஸ்ரீ சுவாமிகள் ஓதாதுணர்ந்த பெருஞானி செந்திலாதிபன் அருளைப் பூரணமாகத் தம் ஐந்தாம் பிராயத்திலேயே பெற்றவர்கள்.

யான் நலனும் இலன் என்பதும் உண்மையன்று இதுவும் உகலருடைய குறைகளை ஏறிட்டுக் கொண்டு கூறியதேயாகும். குருபக்தி, சமயத்தொண்டு ஆகிய நற்குண நற்செயல்கட்கு ஸ்ரீ சுவாமிகள் உதாரணமாகத் திகழ்ந் தவர்கள்

அறிவற்றவராயினும், நற்குண நற்செயல்கள் அற்றவரா யினும் ஸ்ரீ மந் நடராஜ தெரிசனம் கைகூடுதலுண்டு பெறுபவன் தகுதியால் பரிசு அடைதலுண்டு. தருபவன் கருணையால் கொடுத்தலுமுண்டு. இது தருபவன் கருணை என்னும் வகையைச் சார்ந்தது

யானே புலனும் நலனும் இலனன்றே
ஆனாலும் என்போல்மற்று ஆர்பெற்றார் அம்பலத்துள்
மாநாடகம்காணும் வாழ்வு

என்னும் இப்பதியுள் திருநடம் கும்பிடுதலை ஸ்ரீ சுவாமிகள் "மாநாடகம் காணல்" என்கிறார். கதைதழுவியது நாடகம்; கதைதழுவாதது நடனம். கதைதழுவியதொப்பத்

தொடர்பும், அனைவருக்கும் நயமுணர்தலுமுடைமையின் நடனத்தை நாடகம் என்றார். இப்பாடலின் முழுவடிவை யும் காண்போம்.

"வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனே அவ்வூனில் உயிரே உயிர்த்துணையே
ஆனேறும் ஏறே அரசே அருட்கடலே
தேனே அமுதே அளியோங்கள் செல்வமே
யானே புலனும் நலனும் இலனன்றே
ஆனாலும் என்போல்மற்று ஆர்பெற்றார் அம்பலத்துள்
மாநாடகம் காணும் வாழ்வு"

இத்திருப் பாடலின் கீழே, பின்வரும் செய்யுள் இலக்கணக் குறிப்புக் காணப்பெறுகிறது.

"இஃது ஒருவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் இறுதி எழுத்து ஒன்றத் தொடுத் தமையால் முற்றியைபு இரண்டாமடி முதலயற் சீரொழிந்து ஏனை முச்சீரும் இறுதி எழுத்து ஒன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாய் இயைபு. மூன்றாமடி முதற் சீர் ஒழித்து ஏனை முச்சீரும் இறுதி எழுத்து ஒன்றத் தொடுத்தமையால் கூழை இயைபு. நான்காமடி ஈற்றயற் சீரொழித்து ஏனை முச்சீரும் இறுதி எழுத்தொன்றத் தொடுத்தமையால் மேற்கதுவாய் இயைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச் சீரும் இறுதி எழுத்து ஒன்றத் தொடுத்தமையால் ஒரூஉ இயைபு இது காசு என்னும் வாய்பாட்டு முற்றுகர இபற்சீரால் முடிந்தது.

இப்பாடலில் ஐந்து வகையான இயைபுத் தொடைகள் உள்ளன தொடைவிகற்பங்கள் ஐந்து. ஒன்றத் தொடுத்த எழுத்தாவது ஏகாரம்

வாழ்வு என்பது முற்றியலுகர ஈறுடையது காசு என்னும் வாய்பாட்டுக்குக் குற்றுகர ஈற்றான் இறுதல் வேண்டும். வாழ்வு என்பது முற்றுகர ஈறாயினும் காசு என்னும் வாய்பாட்டிலேயே அடக்குதல் வேண்டும்.

**சிவ சிவ**

# விடையரங்கம்

**வினு 26** சமயாச் சாரியர், சந்தான சாரியர் என்பவர்களை ஏன் அப்படி அழைக்கிறோம்? சந்தானச் சாரியார் நூல்கள் உரையோடு எங்கே கிடைக்கும்?

—திரு S. கந்த சுப்பிரமணியன், சென்னை

**விடை:** திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் என்ற நால்வரும் சமயாசாரியர்கள் எனப் பெறுவர். இவர்கள் தலங்கள் தோறும் சென்று தேவார திருவாசகங்களைப் பாடி மக்களிடையே சமய உணர்வை வளர்த்தார்கள். மற்றும் திருஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களை வாதிட்டு வென்றார், போதிமங்கையில் பௌத்தர்களை வாதிட்டு வென்றார், திருநாவுக்கரசர், சமணர் செய்த கொடுமைகளினின்று தப்பிச் சிவனருளைப் புலப்படுத்தியதால் மகேந்திர பல்லவன் சமணத்தினின்றும் திரும்பிச் சைவனானான்; பழையாறையில் சமணர் மறைத்த கோயிலின் முன் திருநாவுக்கரசர் உண்ணாநோன்பிருந்து அரசனின் உதவியால் சமணர்களை ஒடுக்கினார். சுந்தரரின் காலத்தில் சமண பௌத்த மதங்கள் ஒடுங்கி விட்டதால், சுந்தரர் பிறமதங்களோடு வாதிட்டு வென்றதாக வரலாறு இல்லை. மாணிக்க வாசகர் காலத்திலும் தமிழ்நாட்டில் சமண பௌத்த மதங்கள் ஒடுங்கியிருந்தன ஆயினும் இலங்கையிலிருந்த பௌதர்கள் தமிழகத்துக்கு வந்து சிதம்பரத்தையடைந்து மணிவாசகரோடு வாதிட்டனர். மணிவாசகர் அவர்களை வாதில்வென்று சைவத்தை நிலைநாட்டினார். இங்ஙனம் இந்த நால்வரும் சமயவளர்ச்சியில் ஈடுபட்டதால் சமயா சாரியர் எனப்பெறுகின்றனர்.

மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம், என்ற நால்வரும் சந்தான சாரியார்கள் எனப் பெறுவர் சந்தானம் என்பது ஒன்றன் பின் ஒன்றாக வரும்தொடர்ச்சி என்று பொருள்படும். ஈண்டுக் குருவும் சிஷ்யனும் குருவும் சிஷ்யனுமாகத் தொடர்ந்து வரும் தொடர்ச்சியாகிய பரம்பரை என்று பொருள் படும். மெய்கண்டாரின் சிஷ்யர் அருணந்திசிவம். அருணந்திசிவத்தின் சிஷ்யர் மறைஞான சம்பந்தர், மறைஞான சம்பந்தரின் சிஷ்யர் உமாபதிசிவம் இங்ஙனம் குரு சிஷ்ய பாரம் பரியமாக இவர்கள்

இருப்பதால் சந்தானசாரியர்கள் எனப் பெற்றனர். இவர்கள் தாமிருந்த இடத்தில் இருந்தபடியே சைவசித்தாந்தசாத்திரங்களை உபதேசித்தனர். மெய்கண்ட சாத்திரம் என்னும் பதினன்கு நூல்களை இயற்றினர்.

சமயாச்சாரியர்கள் அருளிச்செய்தவை தோத்திரம் ஆகும். சந்தானச் சாரியர்கள் அருளிச்செய்தவை சாத்திரம் ஆகும்.

சந்தானச் சாரியர்கள் அருளிய நூல்கள் உரையுடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

**வினு 27** காயாரோகணத் தலங்கள் எவை எவை?

— திரு S. கந்தசுப்பிரமணியன், சென்னை.

**விடை :** தன்னை வழிபட்ட அடியார்களின் விருப்பத்தின்படி அவர்களை அவரது உடம்போடு தம் உருவில் சிவபெருமான் ஆரோகணித்துக் கொண்ட தலம் காயாரோகணத் தலம் எனப்படும். (காயம் + ஆரோகணம் = காயாரோகணம்) இது காரோணம் என்று மருவியும் வழங்கும்.

நாகைக் காரோணம், குடந்தைக் காரோணம் என்ற இரண்டும் பாடல் பெற்ற தலங்களாக உள்ளன. காஞ்சிக் காரோணம் பாடல் பெறாத தலம். இவைதவிர வேறு காயாரோகணம் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

**வினு : 28** சப்த விடங்கத்தலங்கள் எவை எவை? இங்குள்ள விடங்கர் பெயரும், அவரது நடனமும் யாவை? இத்தலமுள்ள இடத்தையும் தெரிவிக்கவும்.

—திரு S கந்தசுப்பிரமணியன், சென்னை.

**விடை :** திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக் காரோணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்ற ஏழும் சப்த விடங்கத்தலங்கள் ஆகும்.

திருவாரூரில் உள்ளவர் வீதிவிடங்கர் இவரது நடனம் அசபா நடனம். திருவாரூர் மயிலாடுதுறைக்குத் தெற்கே 40 கி. மீ தொலைவில் உள்ளது.

திருநள்ளாற்றில் உள்ளவர். நகவிடங்கர் இவரது நடனம் உன்மத்த நடனம். திருநள்ளாறு காரைக்காலுக்கு மேற்கே 7 கி. மீ. தொலைவில் உள்ளது.

திருநாகைக் காரோணத்தில் (நாகைப்பட்டினத்தில்) உள்ளவர் சுந்தரவிடங்கர். இவரது நடனம் பாராவாரதரங்க நடனம். நாகப்பட்டினம் திருவாரூக்குக் கிழக்கே 24 கி. மீ. தொலைவில் உள்ளது.

திருக்காரயிலில் உள்ளவர் ஆதிவிடங்கர். இவரது நடனம் குக்குட நடனம். திருக்காரயில் என்பது தற்போது திருக்காரவாசல் என்று வழங்குகிறது. இது திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் வழியில் 13 கி மீ. தொலைவில் உள்ளது

திருக்கோளிலியில் உள்ளவர் அவனிவிடங்கர் இவரது நடனம் பிருங்க நடனம். திருக்கோளிலி என்பது தற்போது திருக்குவளை என்று வழங்குகிறது. இது திருவாரூரிலிருந்து எட்டுக்குடிக்குச் செல்லும் வழியில் திருவாரூக்குத் தென் கிழக்கே 20 கி. மீ. தொலைவில் உள்ளது.

திருவாய்மூரில் உள்ளவர் நீலவிடங்கர் இவரது நடனம் கமல நடனம். திருவாய்மூர், திருவாரூக்குத் தென்கிழக்கே எட்டுக்குடிக்கு அப்பால் 1. கி. மீ. தொலைவில் உள்ளது.

திருமறைக்காட்டில் உள்ளவர் புவனிவிடங்கர். இவரது நடனம் ஹம்ஸபாத நடனம். திருமறைக்காடு என்பது தற்போது வேதாரண்யம் என்று வழங்குகிறது. இது திருத்துறைப்பூண்டிக்குத் தென்கிழக்கே 36 கி. மீ தொலைவில் உள்ளது.

**"சீரார் திருவாரூர் தென்நாகை நள்ளாறு**
**காரார் மறைக்காடு காரயில் — பேரான**
**ஒத்ததிரு வாய்மூவர் உகந்ததிருக் கோளிலி**
**சத்த விடங்கத் தலம்"**

என்னும் பழம் பாடல் ஏழுவிடங்கத் தலங்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது.

(தொடரும்)

**விடையளித்தவர்: டாக்டர். ம. வெள்ளைவாரணம்.**

# நூல்நிறை

## 1. வள்ளலாரின் பொன்மொழிகள்

## இரண்டாம் பாகம் (உரைநடை)

[தொகுப்பாசிரியர்: மு. சதாசிவம், வெளியீடு: மீரா நிலையம்; டி.121, சம்பத்து நகர், ஈரோடு - 11; விலை ரூ 7-50; பக்கங்கள்: 4+90]

இராமலிங்க அடிகளார் பாடல்களை அருளிச் செய்ததைப்போல உரைநடைப்பகுதிகள் பல எழுதியுள்ளார். அவ்வுரை நடைப்பகுதிகளிலிருந்து சிறந்த கருத்துக்களைத் தாங்கிய பகுதிகளைத் தனித்தனியாகத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குத் தலைப்புகளும் கொடுத்து "வள்ளலாரின் பொன்மொழிகள்" என்று பெயரும் சூட்டி, ஈரோடு, பன்மொழிப் புலவர், பேராசிரியர், மு. சதாசிவம் எம்.ஏ. அவர்கள் அரியதொரு நூலை வழங்கியுள்ளார். அதன் இரண்டாம் பாகம் வெளிவந்துள்ளது.

இராமலிங்க அடிகளாரின் நூல்களை முற்றும் படிக்க அவகாசம் இல்லாதவர்கட்கும், வள்ளலாரின் உயரிய கருத்துக்களை எளிதில் படித்தறிய விரும்புவோர்க்கும், ஆய்வுக் கட்டுரைகளில் மேற்கோள் காட்ட விழைவோர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

இளந்தலைமுறையினர் இந்நூலைக் கற்று மனப்பாடமும் செய்து கொள்வார்களாயின் அவரது கல்வியறிவு செம்மைப் படுவதோடு அவர்கள் வாழ்வும் மேம்பாடடையும் என்பது திண்ணம்.

## 2. தில்லைத் திருப்பதிகங்கள்

### முதற் றொகுதி

### தேவாரத் திருவாசகத் திரட்டு

[ஆசிரியர்: அ.சொ. சுப்பையா எம்.ஏ.; வெளியீடு: மீ[illegible] பதிப்பகம், 72, மதுரை ரோடு, திருச்சி - 600 008; விலை: ரூ [illegible] பக்கங்கள்: 4+98]

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனர் சரித்திர கீர்த்தனை பிரசித்தமாகும். அதேபோல் அவர்களுடைய கீர்த்தனங்களின் ருசியே அதிகமாகும். ஸ்ரீதியாகப்ரம்மம் அவர்களின் கீர்த்தனங்களில் 'தியாகராஜ விநுத' என்ற கர்த்தா முத்திரை உள்ளதைப் போலவே ஸ்ரீகோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்களிலும் 'கோபால கிருஷ்ணன்' என்ற கர்த்தா முத்திரை இருக்கும்.

ஸ்ரீகிருஷ்ணையர், ஸ்ரீகோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்களைப் பாடுவாரின்மையால் ரசிப்பாரில்லை என்பதே உண்மை.

சங்கீத மும்மணிகள் என்னும் இந்நூல் ஒரு வரலாற்றுநூல், ஒரு கவிதைநூல், ஒருசங்கீத இலக்கணநூல்! மொத்தத்தில் மூன்று நூல்கள் இணைந்த நன்னூல்!

— ம. வே. பசுபதி


Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
I No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீநடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம் – 608 001

தில்லைச் சிற்றம்பலத்தைத் தொழுது ஏத்தி மூவர் பெருமக்கள் அருளிய பதிகங்களையும், மணிவாசகர் தில்லைத்தலத்தில் அருளிய வற்றில் கோயில் மூத்த திருப்பதிகம், கோயில்பதிகம், கண்டபத்து என்ற மூன்று பகுதிகளையும் சேர்த்து திரு சு.சொ. சுப்பையா அவர்கள் குறிப்புரையும் எழுதி இந்நூலை வெளியிட்டிருக்கிறார்கள்.

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார்" என்று மணிவாசகர் அருளியபடி சமயாசாரி யர் அருளிய பாடல்களைப் பொருளுணர்ந்து படிக்கும்போது ஆர்வ மிகுதியும் அனுபவ முதிர்ச்சியும் ஏற்படும். ஆகவே தில்லைப்பதிகப் பாடல்கட்குக் குறிப்புரையும் சிறு விளக்கங்களும் அமையும்படி இந்நூலை வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களின் முயற்சி பாராட்டுக் குரியது.

— **தா. ம. வெள்ளைவாரணம்**

## 3 சங்கீத மும்மணிகள்

[ஆசிரியர்: மகாமகோபாத்யாய, தக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள். பக்கங்கள்: 238+12 விலை: ரூ 20 கிடைக்குமிடம் மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகர் சென்னை 600 090]

மும்மூர்த்திகள் என்றால் பிரம்மா, விஷ்ணு, சிவனைக் குறிக்கும். பூலோக கர்நாடக சங்கீத உலகில் மும்மூர்த்திகள் ஸ்ரீதியாகப்பிரம் மம், ஸ்ரீஸ்யாமா சாஸ்திரிகள் ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர் என்பாரா வர். சங்கீத மும்மணிகள் என்றால் கனம் கிருஷ்ணையர், கோபால கிருஷ்ணபாரதியார், மகாவைத்யநாதையர் ஆகியோரைக் குறிக்கும் என்னும் வழக்கத்தை டாக்டர் உ.வே. சா. அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

டாக்டர் உ.வே சா. அவர்கள் இம்மும்மணிகளைப் பற்றித்தனித் தனியே வெளியிட்ட மூன்று நூல்கள் தற்போது ஒன்றாகவே வெளி வந்துள்ளது. சங்கீத மும்மணிகளின் வரலாறுகள், முதலிருவரின் கீர்த்தனங்கள் ஆகியவை இந்நூலிலுள்ளன.

மும்மணிகளின் லட்சிய வாழ்வு, உரையாடற் சுவைகள், பிற லரும் பெருமைகள் முதலியன நம்மை வியப்பிலாழ்த்துகின்றன.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தா தாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரூ. 22 |
| ஆயுள் சந்தா | ரூ. 250 |
| தனிப் பிரதி | ரூ. 2 |

| | |
|---|---|
| ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் | தொலைபேசி |
| ஸ்ரீராமகிருஷ்ண மடம் | 71959 |
| மயிலாப்பூர் : சென்னை 600 004 . | 71231 |

# காளமேகமும் கவிதைத்தாகமும்

ம. வே. பசுபதி.

காளமேகம், தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனியான 'சுபாவம்' கொண்டவன். அவன் பாடல்கள் அநுபவப்பாடல்கள். 'பிரத்யட்ச வாதம்' அவனிலிருந்து தொடங்கியது. 'வெட்கம் கெட்ட கவிஞன்' என்று அவனை மேம்போக்காக வீமரிசிப்பதில் லாபமில்லை. கவிதை வெளிப்பாடுகளினூடே வந்த அவனின் சுயசரிதத்தில் பொய்யே கிடையாது. அதைப்பாராட்ட வேண்டாமா?

பருவ சுகத்திற்கும், சரீரதாகத்திற்கும் அவன் அதிக முக்யத்துவம் கொடுத்திருப்பானே? இப்படிச் சந்தேகப் படுபவர்களும் உண்டு. பத்தில் ஒரு பங்குதான் அவன் காமம் பாடியிருக்கிறான். அவன் எண்ணங்களில் - சிவப்பு விளக்குகளைப் பற்றிப்பாடும் வண்ணங்களில், பச்சை கலந்திருக்கிறது என்பது உண்மைதான். அவற்றைக் கொச்சை என்று வருணிப்பது எந்த விதத்தில் நியாயமாக முடியும்!

கவிஞன் சூழ்நிலைகளின் தலைக்குழந்தை. உருவாக்கப்பட்ட பிறகு சூழ்நிலைகளையே நிர்க்கதியாக்கி விட்டு - தானாக - தான்தனியாக - தன்னுள்யாவுமாக - ஆகின்ற அதைத்தானே, சொல்லத்தெரியாமல் சொல்ல முடியாமல், ஏறக்குறையக் 'கவித்துவம்' என்ற வார்த்தையால் சுட்டிக்காட்டுகிறோம்.

காளமேகமும் சூழ்நிலையால் உருவாக்கப்பெற்ற கவிஞன்தான். நம்முடைய நாட்டிலே ஒரு பழக்கமுண்டு. எங்கெங்கே நமக்குப் புரியாத அம்சங்கள் தட்டுப்படுகின்றனவோ, அதையெல்லாம் கடவுள் செயல் என்று கதைகட்டி விடுவது.

---

இது, கோயமுத்தூர் வானொலியில் ஒலிபரப்பப் பெற்ற பேருரை நன்றி — "கோவை வானொலி"

ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் சமையல் தொழில் செய்தவன் வரதன். அவன்தான் கவி காளமேகம் ஆகிறான்.

எப்படி?

புரியவில்லை!

புரியவில்லை என்று அவ்வளவு சுலபமாக விட்டுவிடக் கூடாது. அங்கே ஒரு கடவுள் கதை வந்தாக வேண்டும்.

ஸ்ரீரங்கம் வரதனுக்கும், திருவானைக்காவல் என்ற அண்மையில் உள்ள ஊரின் சிவன் கோயிலில் நர்த்தகியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கும் தொடர்பு. அவள் பெயர் மோகனாங்கியாம். அந்த நர்த்தகி சைவசமயத்தவள். இவனோ வைஷ்ணவன் பல நாட்களாகவே அவள் இவனை நச்சரித்துக் கொண்டிருந்தாள்; 'சைவனாக மாறிவிடு' என்று.

கேட்பானா? காலம் கனியவேண்டாமா?

அப்பாடா? ஒருநாள் காலம் கனிந்தது. எப்படி?

அன்று மார்கழித் திருவாதிரைத் திருநாள்' திருவானைக்கா, சிவன் கோயிலில் நடராஜ புறப்பாடு. ஸ்வாமியின் எதிரிலே எல்லா நர்த்தகிகளும் திருவெம்பாவைப் பாடல்களைப்பாடி அபிநயம் பிடிக்கிறார்கள். வரிசையாக ஆளுக்கொரு பாடல் வீதம்! இவள் முறை 19 ஆம் பாடல் 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்'

இவள்...... இவள்தான் வரதனின் காதல் நாயகி, இந்தப் பாடலுக்கு அபிநயம் பிடித்தாள்; இவளே பாடிக்கொண்டு. இந்தப் பாடலில் ஓர் அடி,

'எங்கள் பெருமான்! உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க!'

இந்த அடியைப்பாடி, இவள் அர்த்தபுஷ்டியாக அபிநயம் பிடித்த போது மற்ற நர்த்தகிகள் 'களுக்' கென்று சிரித்தார்கள். அவர்களின் சிரிப்புக்குப் பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை-எல்லாமே இவளுக்கு விளங்கி விட்டது.

என்மார்பு 'சிவன் அடியார் ஒருவனுக்குத்தான் சுகம் கொடுக்க வேண்டும்' என்று ஒரு குலத்துப்பெண் சபதம் எடுத்துக் கொள்வதாக அமைந்தது. அந்தத்தொடர், 'எம் கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க'

இவளோ வித்யாசமானவள். இவள்காதல் கலப்புக்காதல். சாதிக்கலப்பு: சமயக்கலப்பும் கூட; இன்னமும் கொஞ்சம் பூர்வத்தை ஆராய்ந்தால் இந்தக்காதலில் மொழிக்கலப்பும் பின்னியிருப்பதைச் சூட்சமமாகப் புரிந்து கொள்ள முடியும்.

விவரம் தெரிந்த அந்த நர்த்தகிகள் சிரிக்க மாட்டார்களா என்ன! பாஞ்சாலியின் சிரிப்பில் ஒரு பாரதப்போர். அதாவது அதர்மத்தின் அழிவு இந்தப் பாவையரின் சிரிப்பில் தமிழுக்கு ஒரு பாவலன். அதாவது தர்மத்தின் உதயம் பெண்கள் சிரித்தால் போகாது; வரும்!

உடன் பணிபுரியும் நர்த்தகிகளின் சிரிப்பு அவைகள் பின்தொடர இவள் அவமானத்துடன் கோபமாக வீட்டுக்குப் போனாள். குப்புறப் படுத்துக்கொண்டு அழுதாள்; விக்கிவிக்கி; கேவிக் கேவி!

போதும் இன்னும் இந்த அழகியை அழவிடக்கூடாது. வரதன் வந்து விட்டான் காரணம் கேட்டான் காரணம் சொன்னாள் ஆரணங்கு. நடந்ததை நடந்த படியாக. அவனுக்கு அதுவொன்றும் பெரிய ப்ரச்சனையாகப் படவில்லை!

'இவ்வளவுதானே நான் சைவனாக வேண்டும் அதுதானே நீ கேட்பது. அதனாலே உன் அவமானம் நீங்கும் என்கிறாயா? யேய்... இதோபார் திரும்பிப்பார் ...என் முகத்தைப்பார் நான் விபூதி பூசிக்கொண்டு வெகுநேரம் ஆகிவிட்டது' என்றான் பின்னே கோயிலுக்குப்போய் முறைப்படி சிவனடியார் ஆனான்.

அவள் ஆனந்தம் அடைந்தாள் லட்சியம் ஈடேறியதால் அடைந்த ஆனந்தம் அவள் ஆனந்தத்தைக் கண்டு வரதன் அடைந்த ஆனந்தம் இருக்கிறதே அதை ஒரு சின்ன வார்த்தையால் சொன்னால் 'பரமானந்தம்' என்று சொல்லலாம்!

மறுநாட்காலை வரதனுக்கு வேலை போயிற்று என்ற ஓலை. சைவம் சார்ந்தவனுக்கு வைணவக் கோயிலில்- அந்தக்காலத்தில் ஏது வேலை! இதெல்லாம் சகஜம்!

காதலி வரதனைத் தேற்றினாள். 'அருமைக் காதலனே! என் வார்த்தைக்கு மதிப்பளித்த உனக்கு ஒரு சோதனை. இதனால் அடையாதே வேதனை நான் கலையால் சம்பாதிக்கிறேன் இதில் உனக்கும் பங்குண்டு' -வரதன் அவளுடனேயே தங்கி விட்டான்.

இது வரை நமக்குப்புரிகிறது இது காதல் என்னும் புனிதமகா சக்தியின் வரலாற்றுப் பொன்னேடு! இனிமேல் நம்நாட்டு முத்திரைப் பகுதி!

தேவி உபாசகர் ஒருவர் திருவானைக்காவில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அகிலாண்ட நாயகியிடம் 'தனக்குக்கவித்துவம் வேண்டும்' என்று வேண்டித் தவம் இருந்தார். தேவி சிறு பெண் வடிவில் தாம்பூலத்தை வாயில் குதப்பிக் கொண்டு வந்தாள்; கண் மூடி உட்கார்ந்து கொண்டிருந்தவன் எதிரிலே வாயைத்திற உன் வாயில் இந்த எச்சிலைத் துப்புகிறேன் உனக்குக் கவித்துவம் வரும் என்றுள் கண்ணைத்திறந்தார் சிறு பெண்ணைக்கண்டார். 'தவத்தைக் கலைத்த பாவி' என்று தடித்தமான வார்த்தை சொல்லித்துரத்தி விட்டார். அவருக்குப் பிராப்தம் அவ்வளவு தான்.

அன்று வரதன் கோயிலில் படுத்துத் தூங்குகிறுன். மோகனங்கி பணி முடித்து வரும் வரையில் சற்றுக் கண்ணயரலாம் என்று படுத்தவன். அபாரத்தூக்கம் வந்தது அது அதிர்ஷ்டத் தூக்கம் காதலி காதலனைத்தேடிப் பார்த்து வீட்டுக்குப் போயிருப்பான் என்பதாக நினைத்துப் போய்விட்டாள். கோயிலை மூடுபவனும் இவனிருப்பதைக் கவனியாமல் கதவை மூடிவிட்டான்.

தேவி உபாசகனுக்காக வாயில் தாம்பூலத்தைக் குதப்பிய அம்பிகையும் நல்லவேளையாக அதை விழுங்கி விடவில்லை. வரதனை எழுப்பினுள். அவன் வாயைத். திறந்தான். துப்பினுள். அவன் மோகனங்கி சேஷ்டை என்று நினைத்திருப்பானே, என்னவோ!

அவ்வளவுதான் வரதன் கவி காளமேகம் ஆனுன். வரதன் வாழ்க்கையில் தெய்வானுக்ரகம் பிரத்யட்சமாகக் கலந்து விட்டது அப்புறம் என்ன?

இந்த வரலாற்றில் அநேக சந்தேகங்கள் வரும்; தவிர்க்க முடியாது. அது மட்டுமன்று வரதன் காதலியுடன் ஊடல் கொண்டு கோயிலில் வந்து படுத்தான் என்றும் தேவி உபாசகனுக்காகக் கொண்டுவந்த பாலை அந்த இடத்தில் அன்று தேவி உபாசகன் இல்லாமற்போக - அங்குப் படுத்திருந்த வரதனுக்குக் கொடுத்தாள் என்றும் 'காதலியின் சமாதான சமிக்ஞை' என்பதாகக் கருதி வரதன் அதை வாங்கிக் குடித்தான் என்றும் கதை கூறுபவர்களும் உள்ளனர்.

காளமேகம் என்றால், சூல்கொண்ட மேகம், கருக்கொண்ட மழை பொழிவதற்கு ஏற்றமேகம் என்பது பொருள் இந்தக் காளமேகம், கவிதைக் கருக்கொண்ட மேகம்! கவிதை மழைபொழியும் மேகம்; வற்றாத மேகம்! கற்பனை வளம் சுரக்கும் மேகம்!

"இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ-சும்மா
இருந்தால் இருப்பேன்; எழுந்தேனே யாகில்
பெரும்காள மேகம் பிளாய்"

என்று தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்டு தமிழகமெங்கும் திக்விஜயம் செய்த மேகம்.

இந்த மேகம் பவனி வந்தது. அங்கங்கே மழை பொழிந்தது சில இடங்களில் இடியுடன்; சில இடங்களில் மின்னலுடன் சில இடங்களில் இரண்டுடனும். பல இடங்களில் சாந்தமாக.

காளமேகத்தின் கவிதைகளில் 'காம்பீர்யம்' உண்டு நையாண்டி உண்டு. தமிழின் நயம் கொப்பளிக்கும் நலம் உண்டு. அணிகள் அதிகம். அதிலும் சிலேடை ஏராளம்! -என்றாலும் பிற்காலத்தில் இவனுக்கு கிடைத்த பட்டம் 'வசைபாடக் காளமேகம்' என்பதுதான்!

இவன் வைத வசவுகளை எல்லாம் ஓர் இடத்தில் குவிப்போம். இதே அளவுக்கு- இதற்கும் மேலாகக்கூட வள்ளுவரும் வைதிருக்கிறார் ஔவையும் வைதிருக்கிறாள். புறப்பாட்டுப் புலவர்களும் வைதிருக்கிறார்கள் ஆனால் 'வசைபாடக் காளமேகம்' என்ற பட்டம் இவனுக்குத்தான்! ஏன்? எதனால்?

ஒரு வேளை இப்படி இருந்திருக்கலாமோ!

நிகழ்ச்சிகளால் நேரடியாகத் தாக்கப்பட்டு - ஆளைக்குறிப்பிட்டு அவமானப்படுத்தும் முறையில் பாடினானே, அதனாலே இவனை 'வசைபாடக் காளமேகம்' என்றார்களோ? இருக்காது!

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானைத் தாமப்பல் கண்ணன் 'நீ சோழன் மகனல்ல' என்று வைதிருக்கிறான். அதாவது 'உன் அம்மாமேல் சந்தேகம்' என்று பேசியிருக்கிறான்; அதைக் காட்டிலும் கொடிய வசை ஒன்று இருக்கமுடியுமா?

வள்ளுவனும் கூட்டாக வசைபாடினான்
"பயனில்சொல் பாராட்டு வானை; மகனெனல்
மக்கட் பதடி எனல்"
'புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலில் சாதல்
அறம் கூறும் ஆக்கம் தரும்'

எற்றிற் குரியர் கயவர்; ஒன்று உற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து''

என்பன போன்ற பல வள்ளுவ வசைகள் தனி மனிதனைச் சுட்ட வில்லை. ஆள்குறிப்பிட்டு அவமானப் படுத்த வில்லை.

மாவளத்தானைத் தாமப்பல் கண்ணன் வைதவசவும் ஒருமுறை தான். கடுமை ஒருமுறைதான். பின்னே சூடு தணிந்தது. கடுமையாக வந்த வார்த்தை கவிதையில் இல்லை. அதற்குப் பிறகு வாழ்த்திய வாசகம் தான் கவிதையாக நிற்கிறது.

"... ... ... ... மற்று இது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின், யான் பிழைத்தது நோவாய்; என்னினும்
நீ பிழைத்தாய் போல் நனி நாணினையே''

என்ற தாமப்பல் கண்ணனின் உருக்கமான வாசகங்களே சரித்திரமாக நிலைக்கிறது.

ஏதனால் காளமேகத்தின் மற்ற கவிதைகளைக் காட்டிலும் அவனின் வசைப்பாடல்கள் அவ்வளவு பெயரெடுத்தன?

இயற்கையாகவே அவனுக்குப் பிறரைக் கேலி செய்யும் பழக்கம் உண்டு அத்தகைய பழக்கம் உள்ளவர்களுக்குக் கோபம் வந்தால், அப்பொழுது வரும் வசை கடுமையானதாக இருக்கும் அதுவும் பஞ்சத்தினால், பசியினால் பட்டினியினால் கோபம் வந்து வசை பிறந்தால் கொடுமையானதாக அல்ல - கடுமையானதாக அல்ல- கொடூரமானதாகவே அமைந்துவிடும். இன்னமும் அவை வசன வடிவிலிருந்து மாறிக்கவிதை வடிவில் வருமானால் அது. அதீத கொடூரம் ஆகும். அதற்கும் மேலாகக் காரணத்தின் தூண்டுதல், சக்தி பெற்றதாக அமையுமானால் வருணிக்க இயலாத விஷத் தன்மை வாய்ந்த அதீத கொடூர வசையாக அது அமைந்துவிடும்.

காளமேகம் மனித பலஹீனத்தில் மரண அடிகள் பட்டு நிறைய ஊமைக் காயங்கள் அடைந்தவன்.

தனிமனிதக் கொடுங்கோன்மைகள் துரத்த அவன் ஓடினான். ஒருகால கட்டத்தில் அவன் திரும்பி நின்று கொண்டான். புரட்சியாக அல்ல; தற்காப்பாக! வேகமாக அல்ல; விவேகமாக .

ஏன்தானோ தெரியவில்லை; இந்தக் கம்பனுக்கு ஒரு சடையப்பன் கிடைக்காமல் போனான் இந்தச் சேக்கிழானுக்கு ஓர் அநபாயன் கிடைக்காமல் போனான்?

வள்ளல்களிடத்திலே இவன் வாழ்த்தான வார்த்தைகளைக் கொட்ட வில்லையா? ஏனில்லை! ஒரு வள்ளலை இந்திரன் என்று பாடுகிறான். 'இவனை இதுநாள் வரையில் அடையாளம் தெரிந்து கொள்ளாமல், பல ஊர்களுக்கும் நடந்து என் கால்கள் தேய்ந்து விட்டன; உள்ளங்கால் வெள்ளெலும்பு தெரிகிறது; என்று அலுத்துக் கொள்கிறான்.

'உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற, ஒருகோடி
வெள்ளம், காலம் திரிந்து விட்டோமே — உள்ளபடி
ஆர் முநபி அமரர்கோன் இங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்''

என்கிறான். இதைவிட ஓர் உயர்ந்த புகழ்ச்சி ஏது? இந்தப்புகழ்ச்சி செல்லுபடியாக வில்லையே! இது ஒரு பகல் சோற்றுக்கு மட்டும்தானா?

கி. பி. 1455 முதல் 1468 வரை தஞ்சை மாவட்டம் திருமலை ராயன் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு திருமலைராயன் என்ற சிற்றரசன் ஆண்டான். விஜயநகர மன்னர்கட்கு அடங்கியவன் தெலுங்கன். தமிழன்பன்.

திருமலைராயனைக் காளமேகப்புலவன் சந்தித்தது அவன் வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகும். திருமலைராயன் 64 புலவர் களைத் தண்டிகைப் புலவர்கள் என்ற சிறப்புடன் ஆதரித்து வந்தான் தண்டிகைப் புலவர் என்றால் அவர்கட்குத் தனித்தனியாகப் பல்லக்கு உண்டு; பல்லக்கில் செல்லும் உரிமை உண்டு இந்த 64 புலவர் களுக்கும் முக்கியமான வேலை கவித்துவத்தை வளர்ப்பது. ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. மன்னனிடம் வேறெந்தப் புலவரும் அண்டாதபடி பார்த்துக் கொள்வதையே முக்கிய குறிக் கோளாக-கடமையாக அதுவே 'சிறந்த தமிழ் வளர்ச்சிப்பணி' யாகக் கொண்டிருந்தனர். வரும் புலவர் யாரும் வெறும் புலவர் தாமே என்றும் அதீதமகா புத்திசாலிகள்; தமக்குமிஞ்சின புலவர் கள் கிடையாது என்பதாக மன்னனிடம் போலி மாயையை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்தந்தக் காலங்களில் முளைத்த இப்படிப்பட்ட புல்லுருவிகளினாலே தமிழ் எவ்வளவோ சோதனை களைச்சந்தித்திருக்கிறது.

காதலியின் விருப்பப்படி திருமலைராயரைச் சந்தித்துப் பரிசில் பெறுவதற்குக் காளமேகம் வருகிறான் திருமலைராசன் பட்டணத்தில் நுழைந்த உடன் ஓர் அதிசயக் காட்சி. தலைமைப்புலவன் அதிமதுர கவிராயன் பல்லக்கில் வருகிறான். 'அதிமதுர கவிராய சிங்கம்

பராக்' என்று மக்களெல்லாம் முழங்குகிறார்கள். அடேயப்பா! தமிழுக்கு இங்கே எவ்வளவு மரியாதை என்று அதிசயித்துப் போனான் காளமேகம்! அதிசயத்துடன் மூக்கின் மேல் விரல் வைத்துக் கொண்டு அண்ணாந்து பார்த்தபடி நின்றான். பொட்டென்று ஓர் அடி.

இவனுக்குத்தான் விழுந்தது தமிழுக்கு மரியாதை. அடித்தவன் கட்டியங்காரன் 'பராக்' சொல்லுகின்ற அரசாங்க உத்யோகஸ்தன். ஏன் அடித்தாய்? என்றான் காளமேகம். அதிமதுர கவிராய சிங்கம் பராக்' என்று நீ ஏன் சொல்லவில்லை? என்றான் கட்டியங்காரன். ஓகோ! இது மிரட்டி வாங்கிய மரியாதையா? எத்தனை நாளைக்கு நிற்கும் அதிமதுரத்திற்கு ஏன் பராக் சொல்ல வேண்டும். அது ஒரு மருந்துச் சரக்கு: பிறந்தது பாட்டு.

'அதிமதுரம் என்றே அகிலம் அறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும் - புதுமை என்ன
காட்டுச் சரக்கு உலகில் காரமில்லாச் சரக்குக்
கூட்டுச் சரக்கென்றே கூறு!

அதிமதுரகவிராயன் இப்பாடலைக் கேட்டான். அரண்மனைக்குக் காளமேகத்தை அழைத்து வருமாறு உத்தரவிட்டுப் போனான் தன்னை ஒரு வேற்றூர்ப் புலவன் அவமானப் படுத்திப்பாடினான் என்று திருமலைராயனிடம் அதிமதுரம் 'புகார்' செய்தான். காள மேகம் அரசவைக்கு அழைக்கப்பட்டான். 64புலவர்களும் முகத்தை 'உம்' என்று வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களை பார்த்துக் காளமேகம் நீங்களெல்லாம் யார் என்று கேட்டான் அவர்கள் ஆணவத்துடன் நாங்களெல்லாம் 'கவிகள்' என்றார்கள். 'கவிகள்' என்பதற்குக் 'குரங்குகள்' என்று ஓர் அர்த்தமுண்டு காளமேகத்தின் நையாண்டி மூளை வேலை செய்தது. நீங்கள்கவிகளா! ......... அப்படியா? அப்படியென்றால்

'வாலெங்கே? நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே - சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்'

என்று பாடினான்.

(தொடரும்)

# பெரிய புராணத்துள் அப்பருக்கு இடப்பட்ட பெயர்கள் அடைகளோடு கூடிய பெயர்கள்

வே. சீதாலெட்சுமி M., A., M. phil., திருப்பனந்தாள்.

அண்டர் நாயகனைத் தொண்டர்கள் தம் அகத்தும் புறத்தும் கண்டு உள்ளம் ஒன்றிய உணர்வுடன் ஒன்றும் உரை மாலைகள் சாற்றி உவப்புடன் வழிபட்டுய்ந்தனர். நம்முன்னோர் கொண்டொழு கிய தெய்வக் கொள்கையே உலகெலாம் உய்யவழி காட்டும் மெய்ம் மைசேர் பொதுக்கொள்கை; தனித்தமிழ்க் கொள்கை.

'கற்று மனம்போல் கசிந்துகசிந் தேயுருகி
உற்றுசான் லிங்கன் உயர்வேடம் - பற்றுக
முத்தித தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திகளில் நின்றிடுவார் பார்.

இத்தகைய சிவப் பேறு பெற்ற பெரியோர்களே பெரிய புராண வரலாற்று அடியார்கள். 'பார்க்கு மலரெல்லாம் நீயே இருத்தியால் பனிமலரெடுக்கவும் நண்ணிலேன் எனும் அருள் வாசகரின் அமுத மொழிக்கேற்ப காணும் பொருளிலெல்லாம் சிவத்தையே கண்டவர் இப்பெரியார். இப்பெரியாருக்கு வழங்கப்பட்ட பெயர்கள்.

**மருணீக்கியார்:-**

திருத்தொண்டின் நெறிவாழ்வதற்கும் உலக இருள் நீக்குவதற்கும் ஒருமாமணியாய் உலகில் வந்துதித்த திருமாமணியப் நாவரசர். மாதினியார் மணிவயிற்றில் வந்துதித்த அப்பரின் திருத்தோற்றத் தினை ஆசிரியர்,

அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வரும் இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர்போற்பின்
மலரு மருணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார். என்று

அழகுபட நவிலுகின்றார். அவதாரஞ் செய்தார் என்று அவர் பிறப் பினை கடவுள் அவதாரமாகவே கூறுகிறார். புறவிருள் நீக்கும் கதிர்

போல அக இருள் நீக்கும் மருணீக்கியார் அருளால் தோன்றினர். மருணீக்கியார் - பிறவிணைப் பொருளில் மெய்யன்பர் சிந்தையை மலர்விக்கும் என்ற பொருள்படும். இவர்தம் அவதாரத்தைத் திருவாதவூர் புராணம்,

> 'இதயத் தாமரைகள் எல்லாம் செம்மையாய் மலரும் ஞானத்
> தினகரன் உதயஞ் செய்தார்'

என்று விளக்குகிறது பிற்காலத்தில் அப்பர் சைவ சமயத்திற்கு ஏற்பட்ட இருள்போக்கிச் சமணத்தை வீழ்ச்சியுறச்செய்து, ஏனையவர் வாழ்க்கைக்கும் விளக்காய் விளங்கப் போவதனை நினைத்து அவர் தந்தையார் பெயர் சூட்டினரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

**தருமசேனர்:-**

தேசநெறி நிலையாமை கண்டு கா வளர்த்து, குளம் தொட்டு, விருந்தளித்து, வேண்டுநர் வேண்டுவனநல்கி நாவலர்க்கு வளம் பெருகக்கொடுத்து நானிலத்துள்ளோர் பயன்பெறும் வகை செய்தார் மருணீக்கியார். நில்லா உலகத்தின் நிலைத்த புகழ் பெற்று வாழ தவவாழ்க்கையே மேற்கொள்ள நினைத்து, அதற்குக் கொல்லாமை மறந்துறையும் 'சமணர்தம் சமயமே தக்கது என ஓர்ந்து அச்சமயத்தைப் பரவினர் இப்பெருமகனர்.

பாடலிபுத்திரம் எனும் நகர் நண்ணி, ஆண்டு சமணர் பள்ளியிலிருந்து எல்லோரும் உய்யும் வகை தெளிவிக்கும் சமயம் இதுவென்று சரளமாக எடுத்துரைத்தார். சமண சமயத்தருக்க நூற்கள் யாவையையும் பயின்று ஞானத்தலைவராகவே விளங்கினர். எனவே யாவரிலும் சிறந்தவராக விளங்குவதால் இவருக்குத் தருமசேனர் என்றபெயர் வைத்தனர். சமய நிலையில் புகும்போது அதற்கேற்றபடி பெயர் கொடுப்பது மரபு. அதற்கொப்ப பெயர் மாற்றி இருக்கலாம். 'தருமசேனர்' என்பது சமணர்களிடையே வழங்கிய பெருநிலையைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. நந்திசேனர் முதலியவை அவர்கள் தாங்கிய மரபுப்பட்ட பெயர்கள், 'சந்துசேனனும், இந்துசேனனும் தருமசேனனும் கருமை சேர்' என்று வரும் ஆளுடைய பிள்ளையார் தம் திருமுறையான் உணரலாம். இவ்வாறு தங்களுள் எல்லோரிலும் பெருமை வாய்ந்தவராக, தலைமையாளராக விளங்குபவர். ஆதலால் இவருக்கு 'தருமசேனர்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

நாவுக்கரசர்:-

பரசமயக் குழிபுகுந்த தன் தம்பியை மீட்டு நன்னெறி உய்விக்குமாறு செய்ய இறைவனைத் திலகவதியார் வேண்ட 'முன்னமே எமை அடைய முனியாகித் தவமிருந்தான் அவனை சூலை கொடுத்து ஆட்கொள்வோம்' என இறையருள அதன்படி சூலை கொடுத்து ஆட்கொண்டார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அடியார் ஆண்டவன் பால் அன்புமீதூர நெக்கு நெக்கு உருகிப் பாடியபான்மையினால் இறைவனார்,

"பாவுற்றலர் செந்தமிழின் சொல்லால்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கர சென்று லகேழினும் நின்
நாமம் நயப்புற மன்றுக"

என அசரீரியாக அருளினார். இவ்வாறு அடிகளார்தம் திருநாமமே அதனைப் போற்றியவர்களைக் காத்து உய்விக்கவல்லன என்று கூறுகிறார். இப்பெயரே சிவனடி சேர்ப்பிக்கும் பெருமை என்று கூறுகிறார். அப்பூதியடிகளார் இப்பெயரை எழுதியும், கூறியும், தனது பிள்ளைகட்குத் திருப்பெயராகச் சூட்டியும் விழுப்பொருளாம் சிவபெருமான் திருவடியில் இன்புற்றாரென்பது நினைவுகூரத்தக்கது. 'நாவுக்கரசு எனும் திருப்பெயர் ஒற்று நீங்கின் 'ஐந்தெழுத்தாகும். இது போல ஞானசம்பந்தர், நம்பியாரூரர், மணிவாசகர் என்னும் திருப்பெயர்களும் ஒற்று நீங்கி ஐந்தெழுத்தாக அமைந்திருப்பது காணத்தக்கது. 'அஞ்செழுத்தோதி அரனார் கழல் பெற்றதால் இங்ஙனம் ஏற்பட்டதோ என்னவோ?

அப்பர்:-

ஆளுடைய பிள்ளையார் ஆண்ட அரசினைப் பார்த்து 'அப்பரே' என விளிக்க அவரும் 'அடியேன்' என்று கூறுகிறார் இடபத்தினை ஊர்தியாக உடைய சிவபெருமானை அழுது அழைத்துத் தம்முன் வெளிப்பட்டு வரக்கண்ட ஆளுடைய பிள்ளையாரும், தொண்டர் குழாத்துடன் சென்று ஆளுடைய அரசினை எதிர்கொள்ள, ஆண்ட அரசு சம்பந்தர் காலடியில் வீழ்ந்து வணங்க அவ்வாறு அடிமிசை வீழ்ந்தவர்தம் மலர்க்கையினைப் பற்றி எழுந்திருக்கச்செய்து எதிர் இறைஞ்சி, 'அப்பரே என அவரும் 'அடியேன்' என்றார். அப்பர் என்பது தாயனைப் பிள்ளையார் இப்போது அருமையுற அழைத்துக் கொண்டமையாற் போந்த பெயர். இப்பெயரே பயின்று வழங்கப்

பட்டமையான் இதன் அருமைப்பாட்டினையும் பிள்ளையார் அது போழ்து கொண்ட அன்பின் ஆழத்தையும் புலப்படுக்கும்.

ஆளுடைய பிள்ளையாருக்கு உடற்றந்தை அருந்தவமிருந்து அருளால் பெற்றெடுத்த சிவபாத இருதயராவர். உணர்வுத் தந்தை திருமுலைப்பாலமுதூட்டுவித்த திருத்தோணியப்பராகிய சிவபெருமானவார். உயிர்த்தந்தை சிவபெருமான் திருவருளால் கூட்டுவித்த திருநாவுக்கரசு நாயனாராவார் அம்முறையாற் பிள்ளையாரும் அப்பரே என அழைத்தருளினர்.

வாகீசர்:-

இஃது முற்பிறப்பில் முனிவராய் இருந்தபோது இவருக்கு உரிய பெயராகும் இதையே, "எம்பெருமான் வாகீசர்" என்றும் 'வாகீசர்' எனப்பல இடத்திலும், 'சொல்லுக்கு அரசர்' எனவும் பலவாருக மொழிகின்றார்.

இவ்வாறு மருணீக்கியார், தருமசேனர், நாவுக்கரசர், அப்பர், வாகீசர் என்ற பெயர்கள் பிறரால் அவருக்கு இடப்பட்ட பெயர்களாகும். மேலும் அவர் தமது சிறப்பினை விளக்கு முகமாகவும். பெயருக்கு அடைமொழிகளாகவும், தொண்டின் பெருமையைச் சிறப்பிக்கும் வகையிலும் பல அடைமொழிகள் வழங்கப்பட்டு பெரிய புராணத்துள் பயின்று வருகிறது.

**I நாவுக்கரசு என்ற பெயருக்கு அமைந்த அடைமொழிகள்:-**

1) ஆண்ட அரசு (106) 2) கருணை நாவரசு (130) 3) நாவினுக்குத் தனியரசர் (229) 4) சொல்லின் அரசர் (219) 5) நாவினுக்கு அரசர் (172, 367) 6) நாவினுக்கு வேந்தர் (200) 7) ஞான அரசு (299) 8) சொல்லுக்கரசர் (220,408) 9) வாக்கினுக்கு வேந்தர் (392)

**II வாகீசர் என்ற பெயருக்கு அமைந்த அடைமொழிகள்:-**

1) வாகீசத்திருமுனி (147,209) 2) வாகீசர் (242,251,340) 3) எம்பெருமான் வாகீசர் (417,425) 4) வாய்மை திறம்பா வாகீசர் (275) 5) எண்ணமுடிக்கும் வாகீசர் (296) 6) தூய புகழ் வாகீசர் (399) 7) எல்லையில்சீர் வாகீசர் (400) 8) மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் (393)

III 1) கலைவாய்மைக் காவலனர் (347) 2) தொல்கலையின் பெருவேந்தர் (343) 3) கலை மொழிக்கு நாதர்

IV தமிழ் வளர்த்த சிறப்புடையார் என்பதைக் குறிப்பிடும் நோக்கில் அமைத்த அடைமொழிகள்:-

*1. தமிழ்வேந்தர் (331) 2) தமிழாளியார் (360)*

V முற்பிறப்பு முனிவர் என்றவகையிலும், இப்பிறப்பில் மேற்கொண்டுள்ள தவவாழ்க்கையை மேம்படுத்திக்காட்டும் வகையிலும் அமைந்த அடைமொழிகள்:-

*1) வாகீசத் திருமுனி (147,209) 2) திருமுனிவர் (149) 3) பரமுனிவன் (429) 4) பேதமிலா ஒருணர் விற்பெரியவர் (424) 5) விழுத்தவத்து மேலோர் (422)*

VI தொண்டர் என்ற சிறப்பினை நினைப்பூட்டும் வகையில் அமைந்த அடைமொழிகள்:-

*1) தொண்டர் (304,318,333,369) 2) துன்னுந்தொண்டர் (279) 3) உழவாரப் படையாளி (332)*

நாவரசர் மெய்த்தவத்தார்கள் எல்லோராலும் போற்றப்பெறும் பெருமை வாய்ந்தவர். 'புகழெனின் உயிருங் கொடுக்கு' சான்றோர். நிலையில்லாத உலகத்தில் நிலைத்த அறத்தைச் செய்து, இறைவன் பால் அன்பு பூண்டு நிலைத்த பேரின்ப வாழ்வினைப் பெற்றவர் ஆசிரியர் இவரைச் சுட்டும்போது 'தூய புகழ் வாகீசர்' என்றும், அன்பு மேலிட்டால் 'சடைமுடியார்கன்பர்' என்றும் போற்றுகிறார். 'மண் பரவும் பெருங்கீர்த்தி' வாய்க்கப் பெற்றவர் வாகீசத் திருமுனியாவார். அஞ்செழுத்தோதி ஆண்டவனின் அடியார் திறத்தை உலகத்தோர் உய்யும் பொருட்டுச் சமணர்கள் கொடுமையை வென்றவர் ஆகையால் "கல்லே மிதப்பாகப் போந்தவர்" என்று பெருமையோடு கூறுகின்றார் ஆசிரியப் பெருமகனார்.

# பரிபாடற் செவ்வேள்

டாக்டர். கோ தெய்வநாயகம்,

இணைப்பேராசிரியர், கட்டிடக்கலைத்துறைத்தலைவர்,

தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை.

பரிபாடல் ஒன்றே பொருளால் தனிநிலை பெற்று, அறம் பொருளின்பம் வீடு நுதலி, மலைவிளையாட்டு, புனல்விளையாட்டு, கடவுள் வாழ்த்துடன் பல உறுப்புக்கள் கலந்துவரும் பான்மைத்து. பரிபாட்டாவது பரிந்த பாட்டு - பரிபாடலெனும். அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல வெண்பாவுமாகிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒருபாட்டாகி முற்றுப்பெறுவதை" என்பது இளம்பூரணநரை "பரிபாடலென்பது பரிந்து வருவது. அஃதாவது கலியுறுப்பு படோலாது பலவடியும் ஏற்று வருவது" என்பது பேராசிரியருரை "பரிபாடலென்பது பரிந்து வருவது. அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பல அடியும் வருமாறு நிற்குமென்றுணர்க" என்பது நச்சினார்க்கினியருரை.

**செவ்வேள் என்ற சொற்றொடர் ஆட்சி:-**

செவ்வேள் என்ற தலைப்பில் பரிபாடலில் எட்டுப் பாடல்கள் காணப்படுகின்றன. இவ்வெட்டுப் பாடல்களும் முருகனைப் பற்றியனவும், திருப்பரங்குன்றைப் பற்றியனவுமாம். முருகனுக்குப் பல பெயர்கள் இருக்கவும் செவ்வேள் என்ற இத்தலைப்பைக் கொடுத்தவர் யாவர் என விளங்கவில்லை. சங்க நூல்கள் இளைய பிள்ளையார்க்குரிய பெயர்களாகக் காணப்படுவனவற்றுள் சிறந்தவை செவ்வேள் என்ற பெயரும், முருகன் என்ற நன்னாமமுமே ஆகும். வேள் என்றசொலிற்கு விருப்பத்தைச் செய்கிறவன் அல்லது கொடுக்கின்றவன் என்பது பொருள். வேள்வி என்ற சொல்லும் இதன் அடியாக பிறந்த சொல் போலும். யாதானும் ஒன்றை விரும்பிச் செய்தால் வேள்வி எனப்படும் வேள்வி, மக்களை விரும்பியாதல் மழையை விரும்பி யாதல் செய்வது. தொழில் நெறி. வேள் என்ற

பெயருக்குத் தக்கார் மூவர் அவருள் இருவர் கடவுளர். ஒருவன் மக்களினத்தைச் சார்ந்த அரசன். செவ்வேளாகிய முருகனும், கருவேளாகிய காமனும் தேவர் குழாத்தைச் சார்ந்தவர்கள். நன்னன் சேய் நன்னனும் வேள் என்ற பெயருக்குரியவன். அவன் மலைபடுகடாத்தின் தலைவன் ''கேளினி வேளை நீ முன்னிய திசையே'' என்பது மலைபடுகடாம். சங்க நூல்களுள் சிலஇடங்களில் முருகன் செவ்வேள், விறல்வேள், வெள்வேள், செய்யோன, நெடுவேள் என்றெல்லாம் கூறப்பெற்றுள்ளான். கீழ்வரும் தொடர்கள் அதற்குச் சான்று பகர்வனவாகும்.

''பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேளள்'' (திருமுருகு)
''வெண்சுடர் வெவ்வேள்'' (பரிபாடல்)
''அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்'' (சிலம்பு)

குறிஞ்சியை குறிக்க வந்தவிடத்து தொல்காப்பியர் ''சேயோன் மேய மைவரையுலகமும்'' என்றார். சேயோன் என்பதற்கு 'முருகன் காதலித்த வான் தங்கிய மைவரையுலகமும்' என்று உரை வகுத்தார் நச்சர். எனவே குறிஞ்சிக் கடவுளான முருகன் செந்நிறம் பொருந்தியவன் என்பதே பெற்றும் செய்யோன் என்பதே சேயோன் என நீண்டது. ''செவ்வேல் சேய்'' என்புழி ''செய்ய வேலையுடைசேய்'' எக்காலமும் போர்த் தொழிலை மேற்கொண்டவன் ஆதலால் செவ்வே லென்றார்.

அடுத்துச் செவ்வேள் முருகன் என்ற பெயராலும் கடைச்சங்கப் புலவரால் அழைக்கப்பட்டு வந்தான் என்பதற்கும் சான்றுகள் உள

''அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருக'' (திருமுருகு)
''பெரும் பெயர் முருக'' பரிபாடல்
''முருகென மொழியும் வேலன்'' ஐங்குறுநூறு

புராணக்கதைகள்:-

முருகன் அவதாரம்:

முருகனது வரலாற்றைச் சங்க நூல்கள் கூறும்வகை ஒன்று. பிற்கால நுல்கள் இயம்பும் முறை மற்றொன்று. 'பாயிரும் பனிக் கடல்' என்ற பரிபாடல் (5: 25 54) வரிகள் முடிய முருகனது அவதார வரலாறு, கடுவன் இளவெயினனாரால் விளக்கமாகச் சொல்லப் படுகின்றது' இவ்வரலாற்றின் சுருக்கத்தைப் பின்வரும் நச்சினார்க்கினியர் உரையானும் வாய்மொழியானும் தெளியலாம்.

இறைவன் உமையை வதுவைசெய்துகொண்ட நாளில் இந்திரன் சென்று நீ புர்ணச்சிதவிர வேண்டுமென்று வேண்டிக் கொள்ள அவனும் அதற்குடம்பட்டு அது தப்பாகுகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுக்க அதனை இருடிகளுணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினுலே இறைவன் கூருகிய முத்தீயின்கட் பெய்து அதனைத் தம் மனைவியர் கையில் கொடுப்ப, அருந்ததியொழிய அறுவரும் வாங்கிக் கொண்டு விழுங்கிச் சூன் முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக ஆறு கூருகி வளர்கின்ற காலத்து இந்திரன் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறு வடிவும் ஒன்ருய் அவ னுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆருகிய வேறுபட்ட கூற்றுலே மண்டிச் சென்றது' இவ்வரலாற்றினையே செவ்வேளைப் பரிபாடலுள் பாடிய கேசவனாரும் குன்றம் பூதனாரும் முறையே

"பிறந்த ஞான்றே நின்னை யுட்கிச்
சிறந்தோ ரஞ்சிய சீருடை யோயே"

என்றும்

"சலதாரி மணிமிடற்றண்ணற்கு
மதியறற் பிறந்தோய் நீ"

என்று பின்பற்றி ஏற்றினர். நக்கீரர் முருகாற்றுப்படையில்

"இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி"

என்ற அடிகட்கு உரை எழுதிய நச்சினர்க்கினியர் மேற்காட்டிய உரைநடையைக் கூறி இதனைப்பாயிரும் பனிக்கடல்எனும் பரி பாடற் பாட்டானுணர்க என்றும் கூறினர்.

முன்னையோர் வரலாற்றினும் பின்னையோர் வரலாற்றிலுமுள்ள வேற்றுமையினைச் சிறிது காண்போம். பரிபாடலுள் இந்திரன் பைங்கட் பார்ப்பானைப் புணர்ச்சி தவிர வேண்டுமென்று இரந்து கேட்ப, அவன் கருப்பத்தை இந்திரன் கையில் கொடுப்ப இந்திரன் அதனை இருடிகளுக்குக் கொடுத்தான் என்பது பிற்கால நூல்களில் அவுணர்க்கஞ்சிய தேவர்களின் வேண்டுகோளின் பொருட்டு தன் னையே நிகர்க்கும் மகவொன்றை அவர்கட்கு நல்குவான். ஐந்து முகத்தொடு அறிஞராயோர் சிந்திக்கும் அதோமுகம் தந்து தனது

தொல்லைத் திருமுகமாறுங்கொண்டு அவைகள் வாயிலாய் ஆறு பொறிகளை வெளிப்படுத்தினன் என்பது. இஃது ஒரு மாறுபாடு ஆறுமுக வள்ளலைச் சரவணப் பொய்கையில் அறுவர் பயந்தாராக ஆறு கூருகி வளர்கின்ற காலத்து இந்திரனே தன் வர்க்கைமறந்து வச்சிரத்தானெறிய ஆறும் ஒன்ருகி அவனேடு பொருது அவனுடைய வலியைக் கெடுக்க அவன் சூரனை அட அவ்வலி சாலவும் பொருந்துமென வியந்து அமரர் போர்த்தலைவனுக்கிக் கொண்டான் என்பது இடைக்கால வரலாற்றில் கூறப்பட்டுள்ளது, கார்த்திகைப் பெண்கள் அறுவர் திருமுலைப்பாலூட்ட விளையாடும் ஆறு முகத்தையும் சிவன் உமைக்குக் காட்ட அவள் ஆறுஉருவத்தையும் தன்னிரு கரங்களால் ஒன்ருய்ச் சேர்க்கக் கந்தனுனன் என்பது.

## அகலிகை இந்திரன் சாபமேற்ற வரலாறு

இந்திரன் அகலிகையைக் கூடுவான் கருத்தில் எண்ணிக் கோதமன் கங்கையில் நீராடச் சென்றுழி, அம்முனியுருவில் அவன் மனை புகுந்தான். கோதமன் கங்கையும் துயிலுவதைக் கண்டு மீண்டுவர இந்திரன் ''பூசையாய்ப் போகலுற்ருன்' கோதமன் ஆற்றவும் நோற்றவனுதலால் தன் தவலியால் நிகழ்ந்ததை உணர்ந்து சுடுசரமனைய சொல்லால் இந்திரனுக்கு ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறியுண்டாக என்ருன். கோதமர் நிறைமொழி மாந்தராதலின் அங்ஙனமே இந்திரன் பெற்ருன். பின் பிரமன் உள்ளிட்ட தேவர்கள் வேண்டக் கோதமன் சிந்தையில் முனிவு நீங்கி இந்திரனுக்குச் சிறந்த ஆயிரம் கண்ணுகைக் கடவதென்று மாற்றினன். இது 19ம் பாடலில் கூறப்பட்டுள்ளது. நெஞ்சில் பிழைப்பில்லாதவளாகிய அகலிகையைக்கோதமன் 'கல்லர்குதி' எனச் சபித்தான் அவளும் கல்லாய்க் கிடந்தாள்.

19ம் பாடலில் நப்பண்ணனுரால்

''இந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற கோதமன் சினனுறக் கல்லுரு
வொன்றிய படியி தென்றுரை செய்வோரும்''

என்று கொண்டோர் யிழைத்த தண்டம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கம்ப பாலகாண்ட அகலிகைப் படலத்தில் அகலிகை தசரதராமன் கழற்றுகள் கதுவிய ஞான்று, அவள் கல்லுரு நீத்துப் பண்டைப்பெண்ணுரு பெற்றது. 'மை வண்ணம் அங்குக் கண்டேன் கால் வண்ண இங்குக் கண்டேன்' எனக் கோசிகன் வாய்மொழி

வாயிலாக அறிவுறுத்தப் பட்டமைக்காணலாம். இப்பழங்கதையின் உள்ளுறை நீதியை வள்ளுவரும்,

"ஐந்தவித்தானாற்ற லகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி"

என ஐந்துமவித்த கோதமனின் ஆற்றலையும் ஐந்துமவியாத இந்திரனின் புன்மையும் உலகத்தவர்க்கு எடுத்துக் காட்டினார்.

**திரிபுரம் எரித்த வரலாறு**

திருமுறைகளில் சிவனது அட்டவீரட்டானங்கள் பேசப்படுகின்றன. திருவதிகை, திருக்கோயிலூர், திருக்கடவூர், திருவழுவூர், திருக்கண்டியூர், திருக்குறுக்கை, திருப்பறியலூர், திருவிற்குடி என்பன அட்டவீரட்டத் தலங்கள். இவற்றுள் அப்பரும் திலகவதியும் உழவாரத் திருத்தொண்டாற்றிய திருவதிகை பொன்வெள்ளி இரும்பாலாகிய ஆகாசக் கோட்டைகளை முறையே கட்டித் துன்புறுத்தி வந்த, வித்யுன்மாலி, தாரகாட்சன் கமலாட்சன் என்ற மூவரக்கர்களைச் சிவன் சூரிய சந்திரர்களைத் தேருருளையாக, பூமியைத் தேராக, வேதங்கள் பரிகளாக, வாசுகி நாணை இமயம்வில்லாக, நான்முகனைத் தேர்ப்பாகனைக் கொண்டு தீயெழச் சுட்டெரித்த சிவனது வீரத்தைக் குறிக்குமிடமாகப் பிற்கால நூல்களாகிய திருமுறைகள் சாற்றுகின்றன.

"எண்ணு ரெயிலெய்தா னிறைவன் அனலேற்றி
... ... ... ... பரமனதிகையுள்
விண்ணோர் பரவ நின்றாடும் வீரட்டானத்தே"

என்பது சான்றும். சிவனார் திரிபுரமெரித்த வரலாறு பரிபாடலில்—5 ல்

"ஆதியந்தண னறிந்து பரிகொளுவ
பாகமுண்ட பைங்கட் பார்ப்பான்"

எனக் கூறப்பட்டுள்ளது.

**கங்கை கொண்டதும் நீலமிடறுயதும்**

பகீரதனுக்காகக் கங்கையின் வேகத்தைக் கெடுத்துப் பூமியிலதனை விடக் கங்கையை வேணியில் சிவன் கொண்டான் என்ற

புராண வரலாறும் திருப்பாற்கடல் கடைந்தஞான்று கடலில் எழுந்த ஆலகால விடத்தைச் சிவன் உண்டு மணிமிடற்றொருவன் ஆயினன் என்ற பண்டை வரலாறும்

''சலதாரி
மணிமிடற்றண்ணற்கு மதியாரற் பிறந்தோய் நீ'' (பரிபாடல் என்பதாலறியலாம்.

## புலவர்களின் வேண்டுதலும் வாழ்த்துதலும்

பரிபாடலில் செவ்வேளைப் பாடிய புலவர்களும் யாதானும் ஒருநெறியைப் பின்பற்றியே பாடல்களை முடிக்கின்றனர். சிலர் வாழ்த்துதலோடு உறுதிப்படுத்து கின்றனர். கடுவன் இளவெயினனார் பேரறிவு நிலையில் நின்று முருகனை வேண்டுகின்றார். அவர் உலகத்து நுகர் பொருள்களை வேண்டிற்றிலர், அற்றவர் பொருள்களைப் பெற்றுந் தரும் பொருள்களையும் வேண்டிற்றிலர். அப்பொருளால் வரும் இன்பத்தையும் வேண்டிற்றிலர். ஆனால் முருகன்பால் இரந்து வேண்டுவது வீடுபயத்தற் கேதுவாய அவனருளை, இரண்டாவது அவ்வருளைப் பெறுவதற்கேதுவாய்த் தன்மாட்டு உளதாக வேண்டிய அன்பை 3வது அவ்வன்பால் செய்யத் தூண்டும் அறத்தையேயாம். மற்றொரு புலவர்,

''குன்றத் தடியுறை யியைகெனப் பரவுதும்''(பரி 15)

''நன்றமராய மோடொருங்கு நின்னடியுறை
யின்றுபே லியைகெனப் பரவுதும்'' (பரி 21)

என இரக்கின்றார். அஃதாவது மறுபிறப்புளதெனின் நின் குன்றின் அடியிலுறைதல் உண்டாவதாக. எம் சுற்றத்தோடு நின்றனடிக்கண் உறைதல் இன்று போல் என்றும் இயைக என்பதாம்.

இங்ஙனம் புலவர்கள் முருகனிடம் விண்ணப்பித்து உள்ளனர் ஒருசாரார் நின்குன்றம் வாழ்க, மாரிவறங்கூறினும் நின் மலை வீழருவி இடையறாது நீரைப்பெறுக. நாங்கள் அடுத்தடுத்து வழிபடுவதின் பயனாய் நின் புகழினும் அவ்வழிபாடு நாடொறும் சிறந்திடுக என வாழ்த்தினர்.

## பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்கள்

கடைச்சங்க நூல்கள் இலக்கியச் செல்வங்கள். அந்நூல்கள்

பண்டைத் தமிழர்களின் பண்பாடு, அரசியல், சமூகம், புறவாழ்வு அகவாழ்வு முதலியவற்றைப் புலப்படுத்துவதோடு அவர்கள் காலப்பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் எடுத்து ஓதுவன. முன்னுள் தமிழர்களின் பழக்க வழக்கங்களில் வஞ்சினம் கூறுதல் என்ற பழக்கமும் வழக்கில் இருந்தது. அங்ஙனம் சூளுரைக்குங்கால் இறைவன் திருமுன் நின்று நீர்குடித்து அதனை உறுதிப்படுத்துவது தமிழர் இயல்பு. விருந்தோம்பி தலைவியோடு இல்லற நெறியை நடாத்த அவாவுகின்றவன் தலைவன். தலைவன் மாட்டு அயல் மகளிர் நாற்றம் தோன்றுவதாகத் தலைவி ஊடுகின்றுள். உஞ்ஞான்று தலைவன் சூளுரைக்கின்றுன் பரங்குன்றின் வேண்டுகோளில் காணப் படும் பகுதிகள் இரண்டு முற்பகுதி வேண்டாப்பகுதி. பிற்பகுதி வேண்டும் பகுதி. பொன்னும் பொருளும் போகமும் வேண்டாம் என்பது. இம்மூன்றும் ஒன்றிற்கொன்று தொடர்புடையதாய் உடை யானை நெறியல்லா நெறிதன்னை நெறியென்று பொய்ம்மயக்கால் உணரச்செய்து உலகபோகங்களில் அழுத்தி மீளாநரகில் புகுத்தி விடும். எனவே இவை வேண்டாதன. அருளுமன்பு மறனும் வேண் டுமென்பது. இம்மூன்றும் சங்கிலித் தொடர்போல பிணிக்கப் பெற்று வீடு பேறெய்தத் துணைபுரிவன. இப்புலவர் அழியும் மாலைத்தாய சிற்றின்பத்தை விழைந்தாரில்லை. யாண்டும் அழியாப் பேரின்பத்தையே விரும்பினர். இதனை

"யாமிரம்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்
அருளுமன்பு மறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பி னெலிதாரோயே'

என்று கூறியுள்ளார்.

மற்றொரு புலவர் முருகனிடத்து இரந்து கேட்டது, பிறந் தோருறுவது பெருகிய துன்பம், பிறவாதுறுவது பெரும் பேரின் பம் பிறவாநிலையைப் பெற யாமும் சுற்றமும் மக்கள் மாட்டுப் பணிமொழி பயிற்றுது, நின்ற குன்றமே சார்பெனச் சார்ந்து பாடுதும் தொழுதும் பரவுது மென்றுர்.

"பிணிமுக மூர்ந்த வெல் போரிறைவ
அவை யாமுமெஞ் சுற்றமும் பரவுதும்" (பரி - 17)

இவ்வடிகளில் 'பணியொரீஇ நின்புகழேத்தி' என்ற அடியின் கருத்துக்களை

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினுந் தொண்டர்த் தருகிலாய்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"

என்ற சுந்தரரது அருள்மொழிகளோடு ஒப்பிட்டுகண்ணியிலுள்ள மலர்களின் நாற்றத்தை ஏற்று வீசும் காற்றின் நறுநாற்றமன்றிப் பிற மகளிரைத் தோய்தலாலுண்டாய நாற்றமன்று என்று தலைவியை ஆற்றவும் தோற்றுகின்றவன் மணலையுடைய வையைக்கண் இரும் பொழிலானை, குன்றுத்துச் சாரலானை. பார்ப்பரானை, துனியல் என்று கூறுரைக்கின்றான்.

"இனிமணல் வையை இரும் பொழில்"

(பரிபாடல் - 18)

குறிஞ்சி நிலமக்கள் முருகனை இடையறாது வழுத்துவர். முருகனுக்கு வழிபாடு செய்வர். கோழி, மயில், மணிகள், கடம்பமலர், அணையாத் திருவிளக்கு முதலியன பராய்க் கடனாக முருகனுக்குச் செலுத்துவர். பெருந்திருவிழா எடுப்பர். பிள்ளைப்பேறும் வேண்டிநிற்பர். இம்மரபை விரித்துரைக்கின்றார். திருப்பரங்குன்றஞ் சேறுவார்.

"சீறடியவர் எடுத்து (பரி - 8)
பிறவுமேந்தி"

செல்வார் என்பதோடு அமையாது,

"கடுவயிறு வுனெக் கடம்பு நிவோரும்
அருச்சிப்போரும்"
பரி - 8

இப்பண்ணனார் யாண்டும் படித்தறியாத கேட்டிராத மற்றொரு நிகழ்ச்சியைத் தமிழரின் வழக்கத்தையும் கோட்பாட்டையும் தமது 19 ம் பாடலில் காட்டியுள்ளார்.

"பின்யானைச் சென்னி நிறங்குங் கும்த்த
குறுகிச் சிறப்புணக்கால"
என்பதாம்.

# திருச்சதகமும்
# கருவைப் பதிற்றுப்பத் தந்தாதியும்
# சொல்லாட்சி ஒப்பீடு

B. பாஸ்கரன். M.A., M. Phil.

மணிவாசகர் அதிவீரராமர்க்குக் காலத்தால் முற்பட்டவர் ஆகையால் அதிவீரராமர் தம் காலத்துக்கு முற்பட்ட நூல்களைப் பயின்ற போது மணிவாசகரின் திருவாசகத்தையும் பயின்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. மற்றும் மணிவாசகரின் திருச்சதகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு பதிற்றுப் பத்தந்தாதியை இயற்றினர் என்பதைத் திருச்சதகத்துக்கும் பதிற்றுப்பத்தந்தாதிக்கும் இடையே அமைந்த சொல்லாட்சியை ஒப்பீடு செய்து மெய்ப்பிக்கும் முறையில் நிறுவலாம்.

**சொல்லாட்சி :**

நூலில் உள்ள பாக்கள் சொற்களால் ஆக்கப்படுகின்றன. அங்ஙனம் கையாளும் சொற்களை நூலியற்றும், புலவன் வாழ்க்கையில் பலருடன் பேசிப் பேசியும் கற்றிருக்கலாம். முன்னோர் நூல்களைக் கற்றும் அறிந்திருக்கலாம். எனவே இவ்விருவகையும் இன்னின்னவை என்று பிரித்தறிதல் இயலாது. எனினும் முந்திய நூலிலும், பின்னர் எழுதிய நூலிலும் உள்ள ஒன்றுபட்ட சொற்களைப் பட்டியல் செய்தால் இருவகைச் சொற்களும் கிடைக்கும். அவற்றின் பெரும்பான்மை நோக்கியும் பிந்திய நூல் முந்திய நூலைப் பின்பற்றியவற்றை ஒருவாறு உறுதி செய்ய முடியும். அந்த முறையில் திருச்சதகம் பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய இருநூலின் சொல்லாட்சியை ஒப்பிட்டு ஆராயலாம்.

சிவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து மணிவாசகரும், அதிவீரராமரும் நூல் இயற்றியுள்ளனர். எனவே சிவன் பெயர்களைக் கையாளும் போது மணிவாசகர் கையாண்டவற்றில் எவ்வெவற்றை அதிவீரராமர் கையாண்டு உள்ளார் என்பதையும், மணிவாசகரால்

கொளப்பட்டு அதிவீரராமரால் விடுபட்டவை யாவை என்பதை யும் மணிவாசகர் கையாளாது அதிவீரராமரால் மட்டும் கையாளப்பட்டவை யாவை என்பதையும் ஆராயலாம்.

இருவரும் கையாண்ட சிவன் பெயர்கள்;

1. "அப்பனே எனக்கு அமுதனே"
"ஐயனே! சரண் போற்றி என் னையாள்
அப்பனே சரண் போற்றி

2. "...... .......... ...... ...... நரகம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின் இறைவா"

"இருமை இன்பமும் அடியவர்க்(கு) ஊட்டிடும்
இறைவனே! எம்மானே!"

3. "பேசிற்றும் ஈசனே எந்தை எந்தாய்
பெருமானே என்றென்றே பேசிப்பேசி"

4 "உத்தமன்" தொல் புகழ் களா ஈசன்
பொடிகள் தத்த பால்மீமனியின்"

"உத்தமன் அத்தன் உடையான்"
திருவை அம்புவிச் சிறப்பொடும் அளித்தவன்
திருக்களா உடையானே"

5. "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாது எங்கள் உத்தமனே"
"என்று ஆளுவை கருவை உத்தமனே"

6 "எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே"
"எந்தை ஆயினும் குரவன் ஆயினும்"

7. "அவன் எம்பிரான் என்ன
நான் அடியேன் என்ன"
"இறைவன் எம்பிரான் களவில் ஈசனே"

8. "மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட இச்சைதானே"
"தமர நூபுரப் பொற்சரண் ஏத்திடத்
தமியனுக்கு அருள் செய்தான்
... ... ... ... ... ... ... ... ...
கருவை எம்பெருமானே"

9. "ஈசனே எம் எம்மானே"
"இறைவனே எம்மானே"

10 "ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றிவானோர்"
ஒளிமதி முடித்தவேணி
ஒருவனே கருவையானே"

11 "புவனம் நீர் தீக்காற்று இயமானன் வானம்
இருசுடர்க் கடவுளானே"
"கருணை செய்திடும் கடவுள் போற்றி"

12 "தேவர்கோ அறியாத தேவ தேவன்"
"கருவா புரிக்குள் உறை தேவதேவ"

13 "... ... ... தாம்வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே"
"நாதனே கவிஞன் ஏவ
நள்ளிருட் போதிற் சென்ற
தூதனே ... ... ... ..."

தொடரும்...

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| திரு/திருமதி | முன் இருப்பு | 26761 15 |
| உக்கரை கைலாசம் | | 5 00 |
| | ஆக ரூ | 26766 — 15 |

| | |
|---|---|
| சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் கோயில் ஆலயச் செலவு | 65 — 50 |
| திருந்து தேவன்குடி ஆலயச் செலவு | 90 — 00 |
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | 91 — 00 |
| பாணதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | 75 — 00 |
| ஆக ரூ | 321 — 50 |

# ஞானாமிர்தம்

தொடர்ச்சி

இ - ள் பூருவகன்ம பலத்திற் பக்குவப்பட்டவற்றை குற்ற மறப் புசித்தற் வேண்டுமவையிற்றைக் குற்றமறப் புசித்து சுயங் கன்மம் வரும் வழிக்குப் பரிகாரம் நிறை யென்னுங் கதவைச் சிவஞானமென்னும் அழகிய தாழாலே படைக்க அஃது ஐயமறக் கெடும் என்று ஆசாரியன் அருளிச்செய்ய, அங்ஙனமாயின் விடாத பாசமாய்ப் பந்தித்துக் கிடந்த பழையவாகிய வல்வினைகள் குற்றமற்ற ஞானமில்லாததினாலே நீங்காத கன்மமாய் எண்பத்து நான்கு நூறாயிர யோனிகளிலே செனித்தற்கு நிச்சய முண்டாத லாலே அவையிற்றை யான் புசித்தலும் எல்லையாது இதற்குப் பரிகாரமில்லையோ என்று நீ வினவில் பூருவகன்மபலம் புசித்தற வேண்டுமென்ற இதற்கு இளைக்கவேண்டா, காண், புசிக்கைக் காக முன்பே செய்துகொண்ட கன்மத்தையுடைய ஒருவருக்கு அவையிற்றில் அவரால் அழிக்கப்படாதனவாய் எத்துணையோ வர்க்கம் உள ஆதலால் பூருவ கன்மபலம் உள்ள துணையும் புசித்தே தீரவேண்டும் என்று அறிவாயாக. அஃது எங்ஙன மென்னில் அதற்குத் திட்டாந்தம் அழகையும் குணத்தையுமுடைய பசுவினிடத் துண்டாகி வந்த நறுநெய் வெண்ணெயாகாதவாறு போலவும், வெண்மையையுடைய தயிர் இனிய பாலாகாதவாறு போலவும், அழகிய ஒளியையுடைய திருநீறு சாணிக் குழம் பாகாதவாறு போலவும், அழகுநிறைந்த நறுநாற்றத்தையுடைய இனிய சந்தனக்குழம்பு சாத்திரங்களிலே புகழ்ந்தோதப்பட்ட பொதிகைமலையில் உண்டான நறிய சந்தனக் குறடு ஆகாதவாறு போலவும் அச்சரீரத்தில் பிராரத்தமாகி வந்த பூருவகன்மம் புசித்தல்லது தீராது, சுவர்க்கத்தைக் கிட்ட மிகவுயர்ந்த கொடி யசையும் சிறந்த மதில் முதலாகவுள்ளன மண்ணாதற்கும், கூர்மை யுடைய வேல் முதலாகவுள்ளன இரும்பாதற்கும் ஐயமில்லையாம் அச்செய்தியை யொப்ப முற்பவங்களிலும் இப்பவத்தில் சற்குரு கடாக்ஷிப்பதற்கு முன்பும் யான் எனதென்று அகங்கரித்துக் கொண்டு புத்திதத்துவத்திலே பந்தித்துக் கிடந்த கன்மம் நீங்கு வதற்கு மனத்தால் அர்ச்சித்து அகங்கரித்துக் கொள்ளுமதை உபதேசத்தாலே விரைய அறிந்து விரத்தி கொண்டு கன்மச் சேதம் பண்ணிக்கொள்க எ. று.

இது பக்குவப்படாதே கிடந்து கன்மச்சேத வுபாயத்தாலே நீங்கும் கன்மத்திற்குத் திட்டாந்தம்.

ஆகாவாறு போல என்பதை எங்குங் கூட்டிக்கொள்க. அம்ம, மதி — அசை.

நு. வி: பிரார்த்த கன்மம் - நுகர்வினை. சுயங்கன்மம் - வருவினை. யோனிகள் - பிறப்புக்கள். சந்தனக்குறடு - சந்தனக்கட்டை. வினைவயப் பட்ட உயிர் அதற்கேற்ற உடலோடு கூடியவழி அது நுகர்தற்குரிய வினையை மாற்ற இயலாது என்பதை விளக்க நெய்யும் தயிரும் சந்தனக்குழம்பும் உவமையாயின. வினைவயப்பட்ட உயிர் உடலொடு கூடுவதற்கு முன்உள்ள வினையை அதாவது பழவினையை மாற்ற லாம் என்பதற்கு எயிலும் வேலும் உவமையாயின.

"ஏன்ற வினை உடலொடு ஏகும்"
என்னும் திருவருட் பயனும்.

## ஞானசித்தரின் அந்தரங்க வேறுபாடு

42 மறைமுறை உணர்ந்த அறிவின் கிழவரும்
மம்ம ரெய்திய மடவ மாந்தருங்
கைதொடல் கண்படை வெய்துறு பெரும்பயங்
களிபடு காமத் தளிதலை மயங்கிய
தகுதி அல்லது பகுதி இன்றெனிற்
கேளினி வாழி கெடுகநின் அவலங்
கொய்தளி ரன்ன குலக்கோ மளத்தை
மெய்யுற முயங்கி விடனு யினனே
கொம்மை வெம்முலைத் தன்மகட் டழீஇ
அம்முலை நல்கிய யாயென வுவந்தனன்
மற்றுங் கேண்மதி முட்டாட் டாமரை
நுண்டாது பொதிந்த செந்தோ டன்ன
செங்கை கொங்கைக் கருங்கண் தைவர
மைந்த னென்ன மனமகிழ் புருகிப்
பெருவரை கான்ற சிறுவெள் ளருவியிற்
சொரித லானு பாலே அவையே
ஆடவன் வருட அறிவுபிறழ்வு எய்தி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கமொடு

இன்ப வெள்ளத்து அன்பியைந் தாஅங்கு
அறங்கரை நாவின் ஆன்றோர் உள்ளம்
சிறந்தன்று மன்னோ தெரியுங் காலே.

இது ஞானசித்தர்க்குப் பாகிய வேறுபாடு இல்லை யாயினும் அபியந்தர வேறுபாடு உண்டு என்று சொல்லியது.

இ - ள் ஆகமத்தில் சொல்லுகிற முறைமையை யறிந்த ஞானவான்களும் மயக்கமுறுகிற அஞ்ஞானிகளும் ஆகாரம் நித்திரை நடுக்கம் பொருந்திய பெரிய பயம் ஸ்திரீபோக மயக்கத்தைத் தரும் மைதுனம்என்ற இவையிற்றில் அளியராய்த் தலைத்தலை மயங்கும் முறைமையல்லது அவ்விருவருக்கும் வேறுபாடு கண்டதில்லை என்னில் கேட்பாயாக, இனி நின் அஞ்ஞானம் கெடக் கடவதாக. கொய்யப்பட்ட மாந்தளிரை யொத்த நல்ல வங்கிசத்திலே பிறந்த இளமையையுடைய மனைவியை சரீரத்திலே பொருந்தப் பரிசித்து விடயபரன் ஆயினன் ஒரு புருடன் திரட்சியையுடைய விரும்பப்பட்ட முலையையுடைய தன் மகனைத் தழுவி ஆழ்கிய தனங்களாலே பாலைத் தந்து வளர்த்த தாயே என்று பிரிபமானவாறு போலவும் இன்னமும் கேட்பாயாக முள்ளுண்டான தண்டினையுடைய தாமரையின் நுண்ணிய தாது பரந்த செவ்விதழை ஒத்த தன்மகனைக் குழவியின் செங்கை முலையின் கரிதாகிய கண்ணைத் தடவத் தாய் தன் மகன் என்று மனம் நெக்குருகுதலால் பெரிய மலையினின்றும் விழப்பட்ட நுண்ணிய வெள்ளநவிபோலே அம்முலைகள் பால் சொரிதலை அமையாதனவாயிருந்தன. அத்தன்மையவான முலைகளையே அவள் நாயகனை புருடன் வருடியவழி அறிவுமயங்குதலின் இருவரும் ஒருவர் சரீரத்துள் ஒருவர் சரீரம் புகுந்து ஒன்றுயின தன்மை போலக் கையாற் கவர்ந்து இறுகத் தழுவிக்கொள்ளும் முயக்கத்தோடே காமவின்பமாகிய போக சமுத்திரத்திலே அன்பால் கலந்து அழுந்தின தன்மைபோலவும் தருமத்தையே வசனிக்கின்ற நாவையுடைய ஞானவான்கள் உள்ளத்தேயிருக்கும்படியை விசாரிக்குமிடத்து அந்தக்கரண சுத்தியால் வேறுபட்டிருக்கும் எ - று.

என்றது, ஞானவான்களின் உள்ளமானது விசாரிக்குமிடத்து அவரது அந்தக்கரண சுத்தி பிறர்க்குத் தெரியவாராது வேறுபட்டுக் காண் இருப்பது என்றவாறு.

வாழி, ஏ, மதி, மன், ஓ — அசை.

நு. வி: பாகிய வேறுபாடு - வெளிவேறுபாடு. அபியந்தர வேறுபாடு - உள்வேறுபாடு. நல்ல வங்கிசத்தில் - நல்லவம்சத்தில் நல்லகுலத்தில். விடயபரன் - உலகியல் உணர்வில் பெருவிருப்பு உடையவன். கொம்மை - திரட்சியான வசனிக்கின்ற - பேசுகின்ற.

## ஞானவான்களின் அந்தரங்க சுத்தி

43 அரும்புஅவிழ் கழுநீர் ஆயிதழ் அன்ன
கருங்கயல் நெடுங்கண் விடம்கிளர் வாளியர்
முடங்குமதி அணிந்த முழுநீர் முத்தின்
நுடங்குநுதல் இளவேர் இடங்கெட அணிய
ஒடுங்குநிமிர் புருவக் கொடும்சிலை துரப்பினும்
சுரும்புதுரந்து அமைத்த திருந்து மலர் அமளிப்
பருந்துபசி தணிக்குந் திருந்திலை நெடுவேல்
மைந்துடை மைந்தன் சிந்தை கனற்றக்
கன்றியது இன்றெனில் காமம் இன்றே
அதனால் அகாமன் அன்றே நாம வேலோன்
முட்புற முதிர்கனிப் பொற்சுளை மைக்கொள்
கதலித் தீங்கனி இதலூன் பொரியல்
வாளைப் பீலி மீளிக் கயல்துணி
கறிச்சேறு கமழும் மறிக்கோழ் ஊன்துவை
பீலி முருந்தன் நிவந்த சாலி
வெண்சோறு குவைஇய குன்றில் தண்டா
நறுநெய் அருவி இரிய வெள்ளயிர்க்
குறுமுறி அடுக்கிய நெடுமாக் கோட்டினும்
மண்டு அமர்அட்ட வலிகெழு திணிதோள்
உண்டி விருப்புஇல் ஒருவ னின்றும்
கண்டன னேனும் கொண்ட தென்உளத்தே
உள்ளந் தெள்ளாத் தெள்ளிய காட்சியொடு
உள்ளவும் படுவது உளதோ வள்ளிய
கங்கைப் பேரியாற்றுப் பொங்குதிரைத் தீநீர்
ஒன்றொழி பின்றிச் சென்றளப் பரிய
மேருக் குன்றச் சிகர நீர

மண்கொடு மறலி வடிவாய்க் கணிச்சிக்கு
உண்பயன் உதவு காறும் பண்பட
மாசற மண்ணினும் ஆசற நிவந்த
உள்ளமும் உளதுகொல் உரவ ஒள்ளிய
ஞானப் பாணி வானத் துறைஞரும்
விழையும் விழைவில்என் துகள்தீர் மாமண்
அறிவுஅறல் அவாஅச் செறிமல உவர்நீர்
மன்றன் மாசற மண்ணல்
என்றனர் அம்மலம் ஒன்றி லோரே.

இஃது இன்னும் ஞானவான்களுக்கு அந்தரங்க வேறு பாடும் அந்தரங்க சுத்தியும் உண்டுஎன்று சொல்லியது.

இ - ள் அரும்பி யலர்ந்த செங்கழுநீர்ப் பூவின் வெள்ளிய இதழ்போன்ற நிறத்தையும் கயல்மீன் போன்ற பிறழ்ச்சியையுமுடைய கரிய நெடிதாகிய கண்ணென்னும் விடம் தீற்றப்பட்ட அம்பை யுடைய மாதர்கள் முடங்கிப் பிநங்கப் படாநின்ற இளம்பிறையின் முழுத்த நீர்மையையுடையமுத்தை நெருங்க அணிந்தாற்போல நுடங்கிய நெற்றியிலே வேர்வைத் துளியானது இனி இடமில்லையென்னும் படிக்கு நெருங்கப் பொடிப்ப, பக்கத்தே ஒடுங்கி உயர்ந்த புருவ மாகிய வளைந்த சிலையிலே இந்தக் கண்என்னும் அம்பை ஏறிட்டு எய்தாலும் வண்டுகளைத் துரந்து அமைக்கப்பட்ட திருத்தமாகிய புட்ப சயனத்திலே பருந்து முதலாகிய பறவைகளினுடைய பசியைக் கெடுக்கும் திருந்திய இலைவடிவாகிய நெடிய வேலையுடைய அதி பலம் பொருந்திய இராசகுமாரன் முன்போகம் கொண்டதனாலே காமவிகாரம் தீர்ந்த மனதானது காமாக்கினியினாலே வெந்து கன்றியதில்லையாயின் அவனுக்குங் காமவிதனமில்லை. ஆதலால் அவன் அகாமனல்லவோ ? அதுவன்றியும் அச்சத்தைச் செய்யும் வேலையுடைய புருடன் முள்ளைப்புறததேயுடைத்தாய் முதிரப் பழுத்த பொன்னிற முடைத்தாகிய பலாச்சுளையும் கருவாழையின் இனிய பழமும் கவுதாரிமாங்கிசப் பொரியலும் வாளைமீனின் உட்பீலியும் இளங்கயல் மீன் துண்டமும் மிளகின் குழம்பு மணங்கமழும் செம்மறிப் புருவையின் கொழுத்த மாங்கிசத்தின் ஆணமும் ஆகிய இவை கறியாக பீலியடியை ஒத்த உயர்ந்தசெந்நெல்லினாலான வெண்சோறு குவித்த குவையிலே குறையாதே சொரியப்பட்ட நறு நெய்யானது அருவிபோலே இழிந்தோட அந்த நெய்யைத் தடுக்க வெள்ளிய கண்டசருக்கரைக் கட்டியை அடுக்கிய உயர்ந்த

பெரியகரைசெய்த விடத்து முன்பே திருத்திவரவுண்டு புசிப் பிலே விருப்பமில்லாத மண்டுகிற போரிலேவென்ற வலிபொருந்திய திண்ந்த தோளையுடைய ஒருவனாகிய புருடன் இவையன்றியே யின்னும் இரசவர்க்கங்கள் பல கண்டானாயினும் ஏதேனும் ஆசை கொளவருமோ, சொல்; இவ்விரு திறத்தாரையும் போல ஞான வான்கள் கரணவறிவு காணாத சிவபோகத்தைப் புசித்திருக்கிற தெளிந்த சிவஞானக் காட்சியால் விடயபோகங்களைச் சிறிதும் சிந்திப்பதுண்டோ! ஆகவே, அவர்களுக்கு அந்தரங்கத்திலே வேறுபாடு உண்டு காண். வளப்பமுடைய பெரிய ஆகாய கங்கை யாற்றைப்போல மிகுந்த திரையையுடைத்தாகிய இனிய சுத்த சலசமுத்திர நீரிலே மனத்தாலும் நோக்கி அளவிடுதற்கரிய மகா மேருமலைச் சிகரவுயரத்தின் நீர்மையையுடைய மண்ணையிட்டு சிறிதும் ஒழியாதே கொண்டு காலன்போந்து வடித்த வாயை யுடைய மழுவுக்கு இரையாகத் தங்கள் பிராணனைக் கொண்டு கொடுக்குமளவும் அமையஇருந்து புறம்பே அழுக்குப்போகச் சுத்தி பண்ணினாலும் குற்றமற வோங்கிய உள்ளந்தானும் அஞ் ஞானிகட்கு உண்டாகவற்றோ? அறிவுடையோனே! கூறுவாயாக. அழகிய ஞானமாகிய நீரைக்கொண்டு தேவர்களும் விரும்புகின்ற அவா வின்மையென்னும் குற்றமற்ற மகத்தாகிய மண்ணையிட்டு அஞ்ஞானமாகிய திணிந்த நிபிடமலமும் அவாவாகிய மூத்திரமும் என்னும் இரண்டு நாற்றத்தையும் மாசறக் கழுவுதலே பரிமள மாகிய ஆன்மசுத்தியாவது என்று அருளிச் செய்தனர், அந்தமலம் ஒன்றுதல் இல்லாத பெரியோர்கள் எ - று.

இதில், சுத்தசல சமுத்திரத்திற்கு ஆகாய கங்கையைத் திட்டாந்தங் கூறுதல் என்னெனில், அறுபத்து நான்கு நூறாயிரம் யோசனை அகலத்துடனே ஏழுதீவையும் சுற்றியிருக்கும் சுத்த சல சமுத்திரத்தினும் ஆகாய கங்கை மிகுதியானபடியால் என்க. இதனை "எண்டரு மண்ட மென்னும்" கிரியாபாதத் திருவகவலுட் காண்க.

அம்மலம், அ — பண்டறிசுட்டு. கொல் — ஐயம்.

நு வி: காமவிதனம் - காமக்குற்றம். அகாமன் - காமம்இல்லா தவன். மாங்கிசப் பொரியல் - மாமிசப் பொரியல். உட்பீலி உள்ளீப் டாகிய தசை செம்மறிப் புருவை - செம்மறிஆடு. ஆணம் - சுவைமிக்க குழம்பு. பீலி - மயில் இறகு. நிபிடமலம் - ஆணவ மலம், கிரியா பாதம் - இந்நூலகத்து இப்பகுதி முன் இருந்தது என்றும் இப் பொழுது கிடைத்திலது என்றும் கூறுவர்.

44 கறையணல் கட்செவிப் பகுவாய்ப் பாந்தள்
கடுவொடுங்கு எயிற்றின் வடுவுறக் கிழித்துங்
கிழியாப் பண்பிற்று அன்றே யுறையுடன்
மதியொடு புணர்ந்த மறையி னோர்க்கே
செழும்பெரும் பொய்கைக் கொழுந்துவிடு உயரிய
முட்டாள் தாமரைக் கொழுமடல் அகலிலை
அப்புனல் தொத்தாத் துப்பு மெய்ப்படு
மந்திர மருந்தின் மைந்தின் வெந்திறல்
காரிகை தொடினும் பேரிடர் இன்றே
கரைபாய்ந்து கலித்த பெருநீ ருவரித்
தோன்றிவாழ் தொழில வாயினு மயிலை
தீஞ்சுவை உப்பின் சிவணு தாங்கு
ஞான மாக்கழல் மாணுற வீக்குநர்
விடய வேலைத் தடையின்று படியினும்
தீதொடு படியுநர் அல்லர்
மாதுயர் கழியுநர் நீதி யானே.

இது ஞானவான்கள் எல்லாப் போகங்களுடனே கூடி யிருந்தாராயினும் ஞானவிடேசத்தானே அந்தரங்க வேறு பாடுடையர் என்றும், அவையிற்றிற் பற்றிலரென்றும் கூறியது.

இ - ள் அறிவோடே கூடிய ஔடதத்தாலும் மந்திரத்தாலும் பரிகார முடையோர்க்கு கண்ணுற் காணுந் தூரம் கேட்கவற்றுன செவியையும் அணரியிலே கறையையும் பெரிய வாயையுமுடைய பாம்பின்நஞ்சு அடங்கப்படாநின்ற பல்லாலே வடுவுண்டாகக் கடித் தாலும் தீண்டாத இயல்பான இத்தண்மை போலவும் செழுமையும் பெருமையுமுடைய பொய்கையிலே உயரக் கொழுந்துவிட்டு முள்ளைத் தாளிலே யுடைத்தாகிய தாமரையின் செழுமையாய் அகன்ற மடல் இலையில் அந்நீர் தொத்தாத பொலிவுபோல வும், உண்மையாகிய மந்திர சத்தியாலும் ஔடத சத்தியாலும்

மிக்க வெவ்விய வலியையுடைய நஞ்சினை யருந்தினலும் பெரிய துக்கமில்லாதவாறு போலவும் கரையைப் பொருது சத்திக்கின்ற பெரு நீராகிய லவண சமுத்திரத்திலே செனித்து அதிலே வளரும் தொழிலையுடையவாயினும் மீன்கணம் இனிய ரசத்தைச் செய்கின்ற உப்போடு கூடாதவாறு போலவும் ஞானமாகிய மகத்தாகிய வீரக்கழலை அழகுண்டாகக் கட்டினோர் கரையில்லாத விடயபோகமாகிய சமுத்திரத்திலே கரைதட்ட மூழ்கினும் தமக்குக் குற்றமாகிய பந்தபாசத் தொடக்குறுவாரல்லர் முறைமையினலே நிந்திய நோயைப் புசித்துக் கழித்தலையுடையோராவர், இத்துணையே எ - று.

நித்தியநோய், பிராரத்த கன்மம். ஆங்கு என்பது எல்லாவிடத்தும் கூட்டப்பட்டது. ஓ டு, அன்றே — அசை.

நு. வி : அவுடதம் - மருந்து. பரிகாரம் உடையோர்க்கு - நீக்கும் தன்மை உடையோர்க்கு. தொத்தாத - ஒட்டாத. காரி - நஞ்சு. லவணசமுத்திரம் - உவர்க்கடல். செனித்து - தோன்றி. விடயபோகம் - உலகியல் நுகர்வு. பிராரத்தகன்மம் - நுகர்வினை.

## ஞானவான்களின் ஞானப்பிரகாசம்

45 பூக்கமழ் பாணி நோக்கரு நாரங்
கதிர்வாய் அருந்தியுங் கறைபொடு படாஅ
அருணன் போலவும் இருள்நிறம் புரையும்
அகரு மாரமு நுகருத ருலர்பவும்
தீண்டத் தகாஅக் காண்டகு திறத்தவும்
புகைக்கொடி எடுத்து வளைத்துடன் பருகித்
துகள்படக் கடந்தும் துகளற் றோங்கும்
அவிரொளி யுதாசனற் பொருவியும் இருவினை
விடயத் தழுந்தியும் சுடர்ப
அறிவனற் கெழீஇய நெறியி னோரே.

இஃது ஆதித்தனும் அங்கியும் நல்லவையிற்றையும் தீயவையிற்றையும் புசித்தும் குற்றமில்லாதவாறு போல, ஞானவான்கள் செயல்அறுதி யுணர்ந்தபடியாலே பந்தவேதுவாய பதார்த்தங்களுடனே கூடி நிற்பினும் அவர் அவையிற்றை ஞான அனலாலே தகித்துப் பிரகாசிப்பர் என்று கூறியது.

ஆயுள் சந்தா செலுத்தினால்

## ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினால்

ரூ. 55 மதிப்புள்ள

## கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா

பிரபல இசையறிஞர் சேலம்

டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்

இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத் தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

நி. ஆ-ர்

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 13.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 15-00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமரகுருபரர்"
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன்,
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Tiruppanandal
612504

License No. 61. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை — 600 090.